அரசியல்

# சூரியன்

புலனாய்வு மாத இதழ்

ARASIYAL SURIYAN

ISO 9001:2015 CERTIFIED MAGAZINE

மலர்:3 / இதழ்: 2 / ஜூலை 2024 / தமிழ், ஆங்கில மாத இதழ்/ Volume: 3 / Issue: 2 / July 2024 / Tamil, English Monthly


## தமிழக பிம்பத்தை மாற்றும் அரசியல் படுகொலைகள்...!





ரூ.15/-

## வருவாய் நோக்கிலேயே செயல்படும் வருவாய் துறை...!



## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதிய சர்வதேச விமான நிலையம்..!




## அச்சத்தில் ஆழ்த்தும் ஆகாயத்தாமரை..!

# வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் VS புல்லட் ரயில்... ஒரே மாடல், 4.5 மடங்கு செலவு... லோக்கல் பிளானில் இந்திய ரயில்வே!

இந்தியாவில் விரைவான ரயில் சேவையை அளிக்கும் நோக்கில் கொண்டு வரப்பட்டது வந்தே பாரத் எக்ஸ்பிரஸ். இது மத்தியில் ஆளும் பிரதமர் மோடி தலைமையிலான பாஜக அரசின் கனவு திட்டம் என்று கூறலாம். கடந்த 2019ஆம் ஆண்டு முதல் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் புதுடெல்லிவாரணாசிஇடையில்அறிமுகம்செய்யப்பட்டது. இதன் தோற்றமும், வசதிகளும், வேகமும் பயணிகளை பெரிதும் கவர்ந்தது. குறுகிய தூர பயணங்களுக்கு விமானங்களுக்கு மாற்றாக வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்களை பயன்படுத்தினால் என்ன? என்ற கேள்வியை நோக்கி பயணிகள் தள்ளப்பட்டனர்.

5 ஆண்டுகள் ஆன நிலையில் இதுவரை 51 வந்தே பாரத் எக்ஸ்பிரஸ்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளன. இதில் தெற்கு ரயில்வேயின் கீழ் தமிழக மக்கள் பயன்படும் வகையில் 5 ரயில்கள் அறிமுகம் செய்யப்பட்டன. அடுத்து மதுரை பெங்களூரு வழித்தடத்தில் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ்ரயிலைவிடுவதற்கானவேலைகள்மும்முரமாக நடந்து வருகின்றன. இந்த சூழலில் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயிலை தயாரிக்க ஆகும் செலவு என்பது பேசுபொருளாக இருக்கிறது. ஏனெனில் ஒவ்வொரு பட்ஜெட்டிலும் ரயில்வே துறைக்கு ஒதுக்கப்படும் நிதியில் வந்தே பாரத் எக்ஸ்பிரஸிற்கு அதிகப்படியாக செலவிடப்படுகிறது.

வரும் 2047ஆம் ஆண்டிற்குள் 4,500 வந்தே பாரத் எக்ஸ்பிரஸ்களை இயக்க வேண்டும் என்று மத்திய அரசு இலக்கு நிர்ணயம் செய்திருப்பது கவனிக்கத்தக்கது. எனவே ஒவ்வொரு நிதியாண்டிலும் போதிய நிதி ஒதுக்கீடு செய்வது அவசியமாகிறது. ஒரு வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயிலை தயாரிக்க 104.35 கோடி ரூபாய் செலவாகிறது. ஒரு பெட்டியை தயாரிக்க 6.52 கோடி ரூபாய் செலவு செய்யப்படுவதாக கூறப்பட்டுள்ளது. அப்படி பார்த்தால் 2019 பிப்ரவரியில் இருந்து தற்போது 5 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் செலவிடப்பட்டுள்ளது.

ஒரு வந்தே பாரத் எக்ஸ்பிரஸை தயாரிக்க ஆகும் செலவு சதாப்தி எக்ஸ்பிரஸை காட்டிலும் இரண்டு மடங்கிற்கு மேல் செலவாகிறது. தற்போதைய சூழலில் சதாப்தி எக்ஸ்பிரஸிற்கான தயாரிப்பு செலவு சுமார் 48 கோடி ரூபாய் என்று தெரிகிறது. இவற்றை எல்லாம் தூக்கி சாப்பிடும் அளவிற்கு புல்லட் ரயில்கள் தயாராகி வருகின்றன. இந்தியாவின் முதல் புல்லட் ரயில் மும்பை அகமதாபாத் இடையில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் பயன்பாட்டிற்கு கொண்டு வர இலக்கு நிர்ணயம் செய்து பணிகள் நடந்து வருகின்றன. கடந்த 2018ஆம் ஆண்டு நிலவரப்படி ஒரு புல்லட் ரயிலை தயாரிக்க 389 கோடி ரூபாய்.

ஆனால் தற்போது செலவீனங்கள் அதிகரித்து விட்டதால் 450 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. எனவே இந்தியாவில் முதல் புல்லட் ரயில் இயக்கம் தாமதமாகி கொண்டே சென்றால் செலவீனம் மேலும் அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை. எனவே விரைவாக பணிகளை முடிக்க வேண்டியது அவசியமாகிறது. முதல் புல்லட் ரயில் ஜப்பான் நாட்டின் ஷின்கன்சென் இ5 சீரியஸ் மாடல் ரயிலாகும். இது முழுக்க முழுக்க ஜப்பானிய தொழில்நுட்பத்தை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்டு வருகிறது.

அடுத்தகட்டமாக உள்நாட்டிலேயே புல்லட் ரயிலை தயாரிக்க இந்திய ரயில்வே திட்டமிட்டுள்ளது. இதற்காக சென்னை ஐ.சி.எஃப் ரயில் பெட்டி தொழிற்சாலையை தயார்படுத்தி வருகிறது. கிட்டதட்ட வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் மாடலில் புல்லட் ரயிலையும் தயாரித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர ஆலோசித்து வருகின்றனர். இது மேற்கத்திய புல்லட் ரயில்களுக்கு போட்டியாக குறைந்த விலையில் தயாரிக்கப்பட உள்ளது கவனிக்கத்தக்கது.

# அரசியல் சூரியன்

தமிழ் ஆங்கில மாத இதழ்

ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர்

**K.மணிகண்டன் B.Com.,**

**Mobile: 90253 05909**

உதவி ஆசிரியர்கள்

குளித்தலை A.அலாவுதீன் / M.முனியம் சிவ சண்முகம்

சிறப்பு ஆசிரியர்கள்

A.சுந்தரம் / ஜான் சாமுவேல்

தலைமை நிருபர்கள்

T.N.மகேந்திரகுமார் / R.உதயகுமார்

P.பாலகங்காதரன் / M. அசோகன் B.Com., LLB.,

மாவட்ட நிருபர்கள்

அம்மையப்பன் / G.விமல் K.கனகராஜ் / A.மாரியப்பன்

AG ஏழுமலை / K. சரவணன் D.ராஜேஷ் / K. செந்தில்குமார்

சுகுமாறன் / K.மோகன்ராஜ் / P.ஹரிகரன் / ரஜினிகாந்த்

சிறப்பு நிருபர்கள்

M. ஜெயந்த்குமார்

நிருபர்கள்

B.வெங்கடேஷ்
R.தங்கபாண்டியன்
Y.சேக் பரீத்
A.நேதாஜி
S.மஜார்
K..ரவீந்திரன், மத்தியசென்னை
V.கனகசபாபதி
Y.ஆம்ஸ்ட்ராங் தென்சென்னை
A.அருண்குமார்
S.ரவி
முகமது ரஃபீக்
S.நவீன்குமார்
P.ரமேஷ்
P.ராமர்
G.சக்திவேல்
A.சூரியநாகராஜ்
C.தங்கவேல்
திராவிடமணி
N.மணிவண்ணன்
சசிகுமார்

சட்ட ஆலோசகர்

ஜெயம் இ.புஷ்பராஜ் B.A.,B.L., / KTV பிரபு B.A., LLB.,

வேல்முருகன் M.A., B.L., / சபரிகீதன் M.A., B.L.,

98/1, Vijayamangalam Road, Hospital Road,
Utthukuli, Tiruppur - 638751.
E-mail: arasiyalsuriyan77@gmail.com
webside: www.arasiyalsuriyan.com

**அரசியல் சூரியன் மாத இதழின் அறிவுறுத்தல்**

அரசியல் சூரியன் மாத இதழில் இணைந்துள்ள நிருபர்களோ மற்ற பொறுப்பு வகிப்பவர்களோ, எந்த உள்நோக்கத்துடனும் சுயலாபத்திற்காக தவறாக செயல்பட நிர்வாகம் அனுமதிக்காது. மேலும் மீறி செயல்படுபவர்கள் நீக்கப்படுவார்கள். மற்றும் சட்டப்படி நடவடிக்கையும் எடுக்கப்படும். -நிர்வாகம்.

ஆசிரியர் / வெளியீட்டாளர்: K.மணிகண்டன் B.Com.,

இதழின் அனைத்து வழக்குகளும் சென்னை பெருநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.

**ஓரியைத் தேடி ஓர் பயணம்....**

→ பக்கம் : 10

**கமிஷனர் நியமிக்கப்படவில்லை? ரூ.132 கோடியில் சாலை அமைக்கும் பணி மாநகராட்சி வார்டுகளில் முடக்கம்: தொகை என்ன ஆனது?**

→ பக்கம் : 14

**எப்படி இருந்த நான்.. இப்படி ஆயிட்டேன்.. 20 வருடத்திற்கு முன்பு டாஸ்மாக் வருமானத்தை பாருங்களேன்...!**

→ பக்கம் : 15

**யானை வழித்தடத்தில் பண்ணை அரசுக்கு ஐகோர்ட் எச்சரிக்கை**

→ பக்கம் : 17

**சென்னை சிறுவன் மரணம்: குடிநீரை கூட சுத்தமாக வழங்க முடியவில்லையா? எடப்பாடி பழனிசாமி ஆத்திரம்**

→ பக்கம் : 19

**தேசிய தூய்மை பணியாளர் நல ஆணையர் தர்மபுரி வருகை**

→ பக்கம் : 24

**தமிழக முதல்வரின் தனிப்பிரிவு மனுவிற்கு நடவடிக்கை எடுக்காமல் அலட்சியப்படுத்தும் திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம்**

→ பக்கம் : 27

**வசூல் வேட்டையில் ஈரோடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அலுவலகம்?**

→ பக்கம் : 33

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதிய சர்வதேச விமான நிலையம்..!

ஒசூரில் 2,000 ஏக்கர் பரப்பளவில் ஆண்டுக்கு 3 கோடி விமான பயணிகளைக் கையாளும் வகையில் பிரம்மாண்ட பன்னாட்டு விமான நிலையம் அமைக்கப்படும் என்று சட்டப்பேரவையில் 110 விதியின்கீழ் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

தமிழ்நாட்டின் முக்கிய தொழில்நகரமான ஒசூரில் திட்டமிடப்பட்டுள்ள சர்வதேச விமான நிலையம், கர்நாடக மாநிலம், பெங்களூருவின் ஐடி தொழில்நுட்ப பகுதிக்கும், எலக்ட்ரானிக்ஸ் சிட்டி மற்றும் தமிழ்நாடு எல்லைப்புற பகுதிகளுக்கு பெரும் பலன்களை அளிக்கும் என பல வல்லுனர்களால் கணிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது, பெங்களூருவில் உள்ள கெம்பவுடா சர்வதேச விமான நிலையத்திற்கு எலக்ட்ரானிக்ஸ் சிட்டியில் இருந்து செல்வதற்கு 60 கிமீ பயணிக்க வேண்டும். ஏற்கனவே, போக்குவரத்து நெரிசல் பெங்களூருவுக்கு பெரும் தலைவலியாகவே இருந்து வரும் நிலையில், சர்வதேச விமான நிலையத்திற்குச் செல்வோர் போதுமான பொது போக்குவரத்து வசதி இல்லாததாலும், பயணிகள் பல சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே, ஒசூரில் விமான நிலையம் அமைப்பதன் மூலம், பெங்களூர் தென் கிழக்கு பகுதியின் வளர்ச்சி மேம்படும் என தொழில்துறையினர் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றனர். இந்த சூழ்நிலையில் தான் தற்போது ஒசூர் விமான நிலைய அறிவிப்பு வெளியாகியுள்ளது. ஒசூரில் விமான நிலையம் அமைப்பது தமிழ்நாடு மற்றும் கர்நாடக ஆகிய இரு மாநிலங்களுக்கும் பலன் அளிக்கும் என இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிதி அதிகாரியான மோகன்தாஸ் பாய் தெரிவித்துள்ளார்.

பெங்களூருவின், பொம்மனஹள்ளி மற்றும் அதைச் சுற்றியுள்ள தொழிற்துறை பகுதிகளை மேம்படுத்துவதன் மூலம் ஐடி மற்றும் இன்ஜினியரிங் துறைக்கு பெரும் கிடைப்பது மட்டும் அல்லாமல் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பிற துறைகளிலும் திறன்மிக்க வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும் என வல்லுனர்களால் கூறப்படுகிறது. இதேபோல் கர்நாடக சேம்பர் ஆஃப் காமர்ஸ் – இண்டஸ்ட்ரீஸ் மற்றும் ஒசூர் வணிகர் சங்கத்தின் முன்னாள் தலைவரான முரளிதர் கூறுகையில், ஒசூரில் விமான நிலையம் அமைப்பது மிகவும் சிறப்பான முடிவாகும், குறிப்பாக ஒசூரில் உள்ள வாகனத் தொழில் மற்றும் எலக்ட்ரிக் வாகன தொழில் துறைகளைச் சேர்ந்த வணிகர்களுக்கு இதன் மூலம் பெரிய அளவில் பயன் அடைய முடியும். பெங்களூர் நகரின் தெற்கு பகுதி, ஒசூர், தர்மபுரி, சேலம், கிருஷ்ணகிரி மக்களுக்கு சர்வதேச விமான நிலையத்திற்கு பயணம் செய்யும் நேரம் குறைவதால், உற்பத்தித்திறன் அதிகரிப்பதோடு, மொத்த எகோசிஸ்டம் மேம்படும் என தெரிவித்துள்ளார். இதேபோல் கர்நாடக வர்த்தக மற்றும் தொழில்துறை கூட்டமைப்பின் (FKCCI) தற்போதைய தலைவர் ரமேஷ் சந்திர லஹோதி கூறுகையில், ஒசூரில் விமான நிலையம் அமைப்பது பெங்களூர் நகரின் வளர்ச்சிக்கு மிகவும் நேர்மறையான வளர்ச்சியைத் தரும் எனக் கூறியுள்ளார். தமிழ்நாடு கர்நாடக எல்லைப் பகுதிகளில் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும், வியாபாரிகள் இனி ஒசூரில் இருந்து விமானம் மூலம் பயணம் செய்வதனால், தேவனஹள்ளிக்கு செல்வதற்கு எடுக்கும் நேரத்தை மிச்சப்படுத்த முடியும் என அவர் சுட்டிக்காட்டினார்.

கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், தர்மபுரி மற்றும் சேலம் உள்ளிட்டமாவட்டங்களில்தமிழக அரசு அறிவித்திருக்கும் சிப்காட்களுக்கு முதலீடு செய்வோரை ஈர்க்கும் விதமாக ஒசூர் விமான நிலைய அறிவிப்பு அமைந்திருக்கிறது என்றால் மிகையில்லை. இந்த மாவட்டங்களின் தொழில்துறை வளர்ச்சிக்கும், வேலை வாய்ப்பற்ற இளைஞர்களின் வாழ்வாதாரத்திற்கும், தொழிற்துறை வளர்ச்சி மூலம் ஏற்படும் மறைமுக தொழில் வாய்ப்புகளால் ஏற்படும் பயன்கள், மேற்கண்ட மாவட்டங்களில் பொருளாதார ரீதியான வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும் என்பதும் பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

மேலும், மேற்கண்ட மாவட்டங்களிலிருந்து வேலை வாய்ப்பைத்தேடி அண்டை மாநிலங்களுக்கு செல்லும் படித்த இளைஞர்கள் உள்ளூரில் அமையக்கூடும் தொழிற்சாலைகளிலேயே, அவர்களுக்கான வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கும் வகையில் அரசு தொழில் நிறுவனங்களிடம் பேசி உள்ளூரில் உள்ள படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க ஆவண செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் பொதுமக்களிடையே மிகுந்துள்ளது.

# தமிழக பிம்பத்தை மாற்றும் அரசியல் படுகொலைகள்!

28/04/2024 சென்னை, ஆவடியில் சித்த மருத்துவர் மற்றும் அவரது மனைவி மர்ம நபர்களால் வெட்டி படுகொலை.

29/02/2024 வண்டலூர் அருகே திமுக பிரமுகர் கும்பலால் வெட்டி படுகொலை செய்யப்பட்டார். பைக்கில் வந்த 5 பேர் கொண்ட கும்பல் அவரை வழிமறித்து பெட்ரோல் குண்டுகளை வீசியது. அவர் தப்பிக்க முயன்றபோது, அவரை துரத்திச் சென்று, கத்தியால் அவரது கை, கால்களை சரமாரியாக வெட்டிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

23/05/ 2024, பூந்தமல்லியில் பரபரப்பு இந்து அமைப்பு மாநில தலைவர் வெட்டி படுகொலை: தப்பிய மர்ம நபருக்கு வலை.

02/05/2024, நெல்லை காங்கிரஸ் கட்சி தலைவர் ஜெயக்குமார் தன்சிங் படுகொலை செய்யப்பட்டு கண்டுபிடிப்பு.

03/07.2024, சேலத்தில் அ தி மு க பிரமுகர் கூலிப்படையினரால் வெட்டி படுகொலை.

10/06/2024, கமுதி அருகே பாப்பாங்குளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆசிரியர் கண்ணன் (51) மர்மநபர்களால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்.

12/06/2024, சென்னை, திருவான்மியூர் வழக்கறிஞர் வெட்டி படுகொலை.

இப்படி தமிழகம் முழுக்க அரசியல் பிரமுகர்கள் மற்றும் தொழிலதிபர்கள் மீது நடைபெறும் படுகொலை சம்பவங்கள் பெருகிக்கொண்டே வருகின்றன.

மிகச் சமீபத்தில் 05/07/2024, நேற்று பி எஸ் பி தலைவர் ஆர்ம்ஸ்ட்ராங் வெட்டி படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். அவர் ஒரு தலித் தலைவர் என்பதாலும், ஒரு தேசிய கட்சியின் தமிழக தலைவர் என்ற முக்கியத்துவம் உள்ளதாலும் எதிரிகள் எட்டு பேர் உடனடியாக சரணடைந்துள்ளதாக தெரிகிறது. இவர் மீது பல்வேறு வழக்குகள் உள்ளதாகவும், இவரை கொல்வதற்கு பலமுறை எதிரிகள் திட்டம் தீட்டியதாகவும் செய்திகள் வருகின்றன. இவரது கொலையையும், இவருடைய பதவியையும், இவர் மீது உள்ள வழக்குகளின் தன்மையையும் உற்று நோக்கும் போது நமக்கு மற்ற அரசியல் கட்சிகளின் தலைவர்களின் மீதும் அதே பிம்பம் விழுமோ என்ற அச்சமும் உள்ளது.

தூய்மையின் சிகரமாக விளங்கிய அரசியல் கட்சி தலைவர்கள் நிறைந்த தமிழ்நாட்டில் ஒரு அரசியல் கட்சி தலைவர்கள் மீது குற்றப் பிம்பங்கள் சூழ்ந்து வருவது ஒரு ஆரோக்கியமான சமூக அரசியலுக்கு ஆபத்தை விளைவிக்கும் என்பது நிதர்சனம்.

இவை ஒரு உதராணத்திற்கு தான். இது போன்ற நூற்றுக்கணக்கான படுகொலைகள் இந்த வருடத்தில் மட்டுமே நடைபெற்றுள்ளன. இவை அனைத்துமே



ஒன்றோடொன்று தொடர்பு இல்லாதவை என்றாலும், இந்த கொலைகளில் பல ஒற்றுமைகள் உள்ளன.

1. பெரும்பாலான கொலைகளில் ஈடுபட்டவர்கள் 18 முதல் 20 வயதுக்குட்பட்டவர்கள்.

2. கொலைகள் பெரும்பாலும் இரவு நேரங்களில் நடந்தவை.

3. கொலையாளிகள் இரு சக்கர வாகனங்களை பயன்படுத்தினர்.

4. பெரும்பாலானோர் மது போதையிலோ அல்லது போதை பொருட்களின் ஆதிக்கத்திலோ தான் இந்த கொலைகளை செய்துள்ளனர்.

5. பெரும்பாலானோர் கூலிப்படைகளாகத்தான் செயல்பட்டுள்ளனர். அதாவது பணத்திற்காக கொலை செய்யும் கும்பல்கள்.

6. பழிவாங்குதல், பண விவகாரம், நில விவகாரம் போன்றவை தான் பெரும்பாலான படுகொலைகளுக்கு காரணம்.

ஒட்டு மொத்தமாக பார்க்கும் போது, சுலபமாக பணம் சம்பாதிக்க, குறுக்கு வழியில், விரைவில் பணமீட்ட இந்த கொலைகள் நடைபெறுவது தெளிவாகிறது.

அமைதிப் பூங்கா என்று சொல்லப்படுகிற தமிழகம் மெல்ல மெல்ல குற்ற செயல்களின் தலைநகரமாக மாறிக்கொண்டிருக்கிறதோ என்ற சந்தேகம் நம்மிடையே எழுகிறது.

உழைத்து, தொழில் செய்து பொருளீட்டுபவர்களை விட குறுக்கு வழியில் சம்பாதிக்க ஆசைப்படுவது தான் குற்ற செயல்களுக்கு காரணம் என்பது உண்மை.

மேலும், குற்ற செயல்களில் ஈடுபடுபவர்கள் அல்லது தூண்டி விடுபவர்கள் அரசியல் பின்புலம் உள்ளவர்களாக இருப்பதும், காவல் துறையை சேர்ந்த சிலரின் ஒத்துழைப்பு மற்றும் ஆசி இருப்பதும் மறுக்க முடியாத உண்மை. கட்டப்பஞ்சாயத்து, கடத்தல், ஆள் கடத்தல், கள்ள சாராயம், போதை பொருள் விநியோகம், டாஸ்மாக் பார், சூதாட்டம் என சட்ட விரோத நடவடிக்கைகள் கொடி கட்டிப் பறப்பதால், இதில் ஈடுபட்டுள்ளவர்கள், அரசியல் நிகழ்ச்சிகளுக்கு, அரசியல் நிகழ்வுகளுக்கு அந்தந்த பகுதியில் செலவு செய்து அரசியல்வாதி என்கிற போர்வைக்குள் பதுங்கி புகலிடம் தேடி தங்களின் சட்ட விரோத செயல்பாடுகளை தொடர்ந்த வண்ணம் உள்ளனர்.

நேரடியாக தொடர்பில்லா விட்டாலும், இந்த நபர்களுக்கு பின்னால் பல்வேறு அரசியல் கட்சிகளின் நிர்வாகிகள்/ பிரமுகர்கள் பக்கபலமாக உள்ளார்கள்.

அந்த அரசியல் கட்சி நிர்வாகிகள்/பிரமுகர்கள் தங்களுக்கு காவல்துறையில் உள்ள செல்வாக்கை பயன்படுத்தி பொன் முட்டையிடும் வாத்தாக உள்ள சட்ட விரோத செயல்பாட்டில் ஈடுபடும் சமூக விரோத தீய சக்திகளுக்கு கேடயமாக உள்ளார்கள்.

இவை மாற வேண்டுமெனில் ஒட்டுமொத்த சமுதாய அமைப்பும் மாற வேண்டும்.

அரசு நிர்வாகம் புதுப்பொலிவு பெற வேண்டும்,, காவல் துறை நிர்வாகம் மாற்றியமைக்கப்பட வேண்டும். காவல்துறை நிர்வாகத்தில் அரசியல் தலையீடு முற்றிலும் அகற்றப்பட வேண்டும். குற்றவாளிகளுக்கு தண்டனைகள் உடனே வழங்கப்பட வேண்டும்.

போதை பொருட்கள், கள்ளச்சாராயம் ஒழிக்கப்பட வேண்டிய அதே வேளையில், டாஸ்மாக் மது போதையும் இந்த கொலைகளுக்கு மிக முக்கிய காரணியாய் அமைகின்றன என்பதை யாராலும் மறுக்க முடியாது. தமிழகத்தில் நிரந்தர மது விலக்கு ஒன்று தான் இதற்கான நிரந்தர தீர்வு.

அது சாத்தியமில்லையெனில், தமிழகம் அமைதியாக இருப்பது சாத்தியமில்லை.

முறைகேடுகள், நிர்வாக சீர்கேடுகள், லஞ்சம், ஊழல், அதிகார துஷ்பிரயோகம், அரசியல் தலையீடுகள் ஆகிய இவைகள் மாற வேண்டும், இல்லையேல் தமிழகம் கொலைகாரர்களின் ராஜ் ஜியமாகிவிடும்.

அரசு துரித கதியில் இது போன்ற குற்றச்செயல்களில் ஈடுபடும் கும்பல்களை வேரோடு களைவதோடு, அமைதி பூங்காவாகத் திகழும் தமிழ்நாட்டுக்கு தேசிய அளவில் களங்கத்தை ஏற்படுத்த கூடும் அபாயத்திலிருந்து தமிழகத்தை காப்பாற்றக்கூடிய தார்மீகக் கடமை அரசுக்கு உள்ளது. அரசு அதை உணர்ந்து செயல்படுமா என்பதை பொதுமக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

# அச்சத்தில் ஆழ்த்தும் ஆகாயத்தாமரை!

மேட்டூர் அணையில் இருந்து காவிரி ஆற்றில் குடிநீருக்காக 1,100 கன அடி நீர் மட்டும் வெளியேற்றப்படுகிறது. இந்த நீர் காவிரி ஆற்றின் தடுப்பணைகளில் தேக்கி வைக்கப்பட்டு திறக்கப் படுகிறது. ஈரோடு வெண்டிபாளையம், சமய சங்கிலி பேரேஜ், பாசூர் உள்ளிட்ட மின் கதவணை தடுப்பணையில் நீர் தடுத்து நிறுத்தி மின்சார உற்பத்தி செய்யப்பட்டு பின் தண்ணீர் திறக்கப்பட்டு அனுப்பப்படுகிறது.

ஈரோடு மாவட்டம், நாமக்கல் மாவட்டத்தை இணைக்கும் பள்ளிபாளையம் காவிரி ஆற்று பாலத்தின் கீழ் சுமார் 25 ஏக்கர் பரப்பளவில் பல மாதங்களாக அசுர வேகத்தில் ஆகாயத்தாமரை வளர்ந்துள்ளது.




இதனால் காவிரி ஆற்று நீரில் அடித்து வரும் நெகிழி புட்டிகள், குப்பை, மீன் கழிவு போன்றவை தேங்கி துர்நாற்றம் வீசுகிறது. ஆகாயத் தாமரை செடிகள் ஆற்று நீரை சூழ்ந்துள்ளதால் தினமும் பரிசலில் சென்று மீன் பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.


**மோ.செல்வராஜ்**
திமுக மாவட்ட பிரதிநிதி
நகர மன்ற தலைவர்
பள்ளிபாளையம் நகராட்சி

ஆகாயத்தாமரை செடிகள் ஆற்று நீரை முழுவதுமாக மூடியிருப்பதால் மீன்கள் மிகுந்த ஆழத்துக்குசென்றுவிடுகின்றன.அதேசமயம் மீன்களுக்கு போதுமான அளவு காற்று கிடைக்காமலும், ஆகாய தாமரைகளால் ஆற்று நீரில் மிதந்து தேங்கியுள்ள கழிவுப் பொருள்கள் மற்றும் குப்பை குளங்களால் ஏற்படும் நச்சுத்தன்மைகளாலும் மீன்வளம் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், இந்த நச்சுத்தன்மை கலந்த நீரால் ஈரோடு, நாமக்கல் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளுக்கு குடிநீர் ஆதாரமாக விளங்கும் காவிரி ஆற்றில் குளிக்கும் பொதுமக்களுக்கு கண் எரிச்சல், தோல் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படுகின்றன. அதிக அளவு சூழ்ந்துள்ள ஆகாயத்தாமரையால் விஷ ஜந்துக்கள் அப்பகுதியை ஒட்டியுள்ள வீடுகளுக்குள் நுழைந்து விடுவதால் அப்பகுதியை சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடியிருப்பு வாசிகள் அச்சத்தில் உள்ளனர்.



காவிரி ஆற்றுப்படுகையில் பெருகி பொதுமக்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் ஆகாயத்தாமரைகளை சுத்தப்படுத்துவது குறித்து பள்ளிபாளையம் நகர மன்ற சேர்மன் இடம் கேட்ட பொழுது, அவர், நகராட்சி அதிகாரிகள் தற்பொழுது அப்பகுதியில் ஆய்வு மேற்கொண்டு வருவதாகவும். கடந்த சில மாதங்களாக ஆகாயத்தாமரை அகற்றினாலும் மீண்டும் ஆகாயத்தாமரை அதிகளவு காவிரி ஆற்றில் உற்பத்தி ஆகிக்கொண்டு தான் உள்ளது எனவும், ஆகாயத்தாமரையை இனி முற்றிலுமாக அழிக்கும் வழிமுறைகளை நகராட்சி நிர்வாகம் தற்போது மேற்கொண்டுள்ளது அதற்குண்டான நடவடிக்கையும் அதி விரைவாக நாங்கள் எடுத்து வருகிறோம். இனி, இப்பகுதி ஆற்றில் ஆகாயத்தாமரை இல்லாத அளவு நகராட்சி நிர்வாகம் பார்த்துக்கொள்ளும் என்றார்.

எனவே, உடனடியாக பொதுப்பணித்துறையினர் காவிரி ஆற்றை ஆக்கிரமித்துள்ள ஆகாயத்தாமரை செடிகளை முழுமையாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்பார்த்து காத்துக் கிடக்கின்றனர்.

# வருவாய் நோக்கில் வருவாய்த்துறை!

வருவாய்த் துறை அனைத்துத் துறைகளுக்கும் தாய்த் துறையாகக்கருதப்படுகிறது.அரசின்ஏனையதுறைகளின் வளர்ச்சிப் பணிகளின் செயல்பாட்டிற்கு வருவாய்த் துறையின் பங்கு இன்றியமையாததாகும். மற்ற எல்லா அரசுத்துறைகளின் நிர்வாக வளர்ச்சிக்கு முதுகெலும்பாக வருவாய்த் துறையே விளங்குகிறது. மக்களுக்கான அரசின் பணிகளும், சேவைகளும், குறிப்பிட்ட காலவரையறைக்குள் அவர்களைச்சென்றடையஇத்துறை என்றும் முன் நிற்கிறது. வருவாய்த் துறை தொடர்பான சில சேவைகள் பின்

வருமாறு :

1) முதியோர் உதவித் தொகை ஒப்பளிப்பு. 2) உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை ஒப்பளிப்பு. 3) ஆதரவற்ற விதவைகளுக்கு குடும்ப ஓய்வூதியம் ஒப்பளிப்பு. 4) கணவனால் கைவிடப்பட்ட மனைவியருக்கு குடும்ப ஓய்வூதியம் ஒப்பளிப்பு. 5) உடல் ஊனமுற்றவர்களுக்குக் குடும்ப ஓய்வூதியம் ஒப்பளிப்பு. 6) ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் ஒப்பளிப்பு. 7) விபத்தில் மரணம் அடைந்த பொருளீட்டும் குடும்பத் தலைவரின் குடும்பத்திற்கு நிதி உதவி. 8) குடும்பத்தில் வருமானம் ஈட்டி வந்தவர், தேர்ந்தெடுக்கப்பட்ட 844 தொழில்களில் ஈடுபடும்போது இறந்து விட்டால், அவரது குடும்பத்திற்கு நிதி உதவி அளித்தல். 9) சாதி, இருப்பிடம், வாரிசு, செல்நிலை (சால்வன்சி), பிறப்பு மற்றும் இறப்பு முதலிய சான்றுகள் வழங்கல். 10) பட்டா மாறுதல். 11) புதிய உட்பி ரிவுகள் ஏற்படுத்துதல். 12) பயிர் நிலங்கள் ஒப்படை. 13) குடிவாரச் சட்டம் அமல்படுத்துதல். 14) நியாய குத்தகை நிர்ணயம் செய்தல். 15) வீட்டு மனைப் பட்டா வழங்கல். 16) நில சீர்திருத்த சட்டத்தின் கீழான விவசாய உபரி நிலங்களை வழங்குதல். 17) திரையரங்குகளுக்கு ஆட்சேபணையின்மை சான்று

18) அடகு வணிகர் உரிமம் வழங்குதல். 19) படைக்கலச் சட்டத்தின் கீழ் உரிமங்கள் வழங்குதல். 20) வெடிபொருள் சட்டத்தின் கீழ் உரிமங்கள் வழங்குதல். இவை தவிர, வருவாய்த் துறை, நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற தேர்தல்களை நடத்துவதில் பெரும் பங்காற்றுகிறது. தகுதியுடையவர்களை வாக்காளர்களாகப் பதிவு செய்கிறது. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் மற்றும் நீக்குதல் ஆகிய பணிகளையும் வருவாய்த் துறை செய்கிறது. பொதுமக்களுக்கு வாக்காளர் பட்டியல்களைக் குறைந்த விலைக்கு வழங்குகிறது.

வறட்சி, வெள்ளம், புயல், ஆழிப்பேரலை, தீவிபத்து போன்ற இயற்கை இடர்பாடு ஏற்படும் நேரங்களில் பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்க வருவாய்த் துறை விரைந்து செயலாற்றிவருகிறது. பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயரச் செய்து, அவர்களுக்கு உணவு, உறைவிடம் வழங்கி, சேதமடைந்த குடிசைகளை சீரமைக்க நிதி உதவி வழங்குதல் ஆகிய பணிகளைச் செய்வதில் வருவாய்த் துறை பெரும் பங்காற்றி வருகிறது.

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டத்தின் மூலம் விவசா யிகளுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் பல்வேறு சலுகைகள் வழங்கப்படவுள்ளன. பொது நோக்கங்களுக்காகவும், சமுதாய நலனை முன்னேற்றுவதற்காகவும், கல்வி நிலையங்கள், தகவல் தொழில் நுட்பப் பூங்காக்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் ஏனைய பிற வளர்ச்சிப் பணிகளுக்கான நிறுவனங்களுக்கு, சில நிபந்தனைகளுக்குட்பட்டு அரசு நிலங்கள் நிலஉரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. தொழி லியல் நோக்கங்களுக்காகத் தேவைப்படும் நிலங்களை விரைவாகக் கையகப்படுத்தும் பொருட்டு, அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் தகுந்த அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இது போன்ற அனைத்து நடவடிக்கைகளிலும் வருவாய்த் துறை முக்கிய பங்காற்றுகிறது.

இவ்வாறாக, வருவாய்த் துறை, பொதுமக்களுக்கும் சமுதாயம் முழுமைக்கும் மாவட்ட வருவாய் நிர்வாகம் மூலம் பெருமளவில் சேவை புரிந்து வருகிறது. மாவட்ட வருவாய் நிர்வாகம், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையில் இயங்கி வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உதவியாக மாவட்ட வருவாய் அலுவலர்கள், வருவாய் கோட்டாட்சித் தலைவர்கள், வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் கிராம உதவியாளர்கள் ஆகியோர் கொண்ட விரிவான ஓர் அமைப்பு உள்ளது. மாநில அளவில் வருவாய்த்துறை கீழ்க்கண்ட நான்கு துறைகளாக இயங்கி வருகின்றன:

அவை முறையே :

1) வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை 2) நில நிர்வாகத் துறை 3) நில அளவை மற்றும் நில வரித்திட்டத் துறை 4) நிலச் சீர்திருத்தத் துறை போன்ற ஒவ்வொரு துறையும் அனுபவமிக்க இந்தியஆட்சிப் பணி அலுவலர் ஒருவரின்

தலைமையில் இயங்கி வருகிறது.

மனிதனின் பிறப்பு முதல் அவன் இறந்த பிறகு அவனுடைய வாரிசு பிரச்சனை வரை அணுக வேண்டிய முதல் அலுவலகமும் அதிகாரியும் வருவாய்த் துறையை சார்ந்தவர்களாகவே இருக்கும் பட்சத்தில் தமிழகத்தில் வருவாய் துறையில் பணிபுரியும் அலுவலர்களின் பணி அர்ப்பணிப்பு எப்படி இருக்கிறது என்பதை பொதுமக்கள் தெரிந்து கொள்வதற்காகவே அன்றாடம் நாம் நேரடியாகவோ அல்லது ஊடகங்கள் வழியாகவும் பார்க்கும் வருவாய்த் துறையின் பல காட்சிகளை இங்கு ஆவணப்படுத்தியுள்ளோம்.

இதில் நாம் முதலில் காண்பது மண்வளம் மற்றும் கனிம வளச் சுரண்டல். இவை இரண்டையும் பூமித்தாயிடமிருந்து சுரண்டுவது எந்த ஒரு கிராம நிர்வாக அலுவலருக்கும் அல்லது வருவாய் ஆய்வாளருக்கும் அல்லது வருவாய் வட்டாட்சியருக்கும் தெரியாமல் நடப்பதற்கு சாத்தியமே இல்லை என்பது கண்கூடு.

ஏதோ ஒரு சில இடங்களில் இச் சுரண்டலை எதிர்த்து போராடும் சில அதிகாரிகள் தாக்குதலுக்கு உண்டான சம்பவங்களும் உண்டு. ஆனால் இதில் ஒரு விஷயம் கவனிக்க வேண்டும் இது போன்ற தாக்குதலுக்கு சுரண்டல்களுக்குதுணைபோகும்அரசுஅதிகாரிகள்தான் காரணம் எனில் அது மிகையல்ல. ஏனெனில் சட்ட மீறல்களுக்கு துணை போகும் அரசு அதிகாரிகள் அவர்களின் ஊக்குவித்து சென்று விடுகின்றனர்.

அதன் பிறகு வரும் நேர்மையான அதிகாரிகள் பாதிப்படைவதும் தாக்குதலுக்கு உள்ளாகும் இயல்பான ஒன்றாகவே பார்க்கப்படுகிறது.

இரண்டாவது நில அபகரிப்பு மற்றும் ஆக்கிரமிப்புகள். இதில் நில உடமை குறித்த வழக்குகள் பெரும்பாலும் வருவாய் துறையின் தவறுகளாலேயே நடப்பதாக அறியப்படுகின்றன. நில ஆக்கிரமிப்புகள் அது அரசுடைய நிலமானாலும் தனியாருடைய நிலமானாலும் அதற்குரிய பராமரிப்பு ஏடுகளில் குறிப்பிட்ட காலத்தில் முறையாக மாற்றப்படுவதில்லை.

பத்திரப்பதிவு அலுவலகத்தில் நடக்கும் பத்திரப்பதிவிற்கும் வருவாய்த்துறையினர் பராமரிக்கும் பட்டா சிட்டா மாற்றத்திற்கும் இன்னும் நிறைய முரண்பாடுகள் களையாமலேயே உள்ளன.

உதாரணத்திற்கு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி வட்டத்தில் உள்ள ஒரு கிராமத்திற்குட்பட்ட நிலம் நில உடமையாளரிடம் இருந்து மற்றொருவர் பெயருக்கு பத்திரப்பதிவு செய்யப்படுகிறது. அவர் வருவாய்த்துறையினருக்கு மூன்று நான்கு முறை பட்டா மாற்றத்திற்கு விண்ணப்பிக்கிறார். விண்ணப்பம் துணை வட்டாட்சியரால் காரணமே இன்றி நிராகரிக்கப்படுகிறது. அந்தத் துணை வட்டாட்சியர் இதற்கு வாய்மொழியாக சொன்ன காரணம் இந்த நிலம் சம்பந்தமாக எந்த ஒரு ஆவணங்களும் இல்லாத இரு நபர்கள் இந்த இடத்திற்கு பட்டா கொடுக்க வேண்டாம் என வாய் மொழியாக கூறிய வார்த்தையால் மட்டுமே மேற்கண்ட நிலத்திற்கு துணைவட்டாட்சியர் பட்டா கொடுக்க மறுத்துள்ளார். ஆனால் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரின் பதிலோ வேறு ஒரு மாதிரி இருக்கிறது. வெறும் மனு மட்டும் கொடுத்து விட்டு சென்று விட்டாள் வேலை முடிந்து விடுமா கொடுக்க வேண்டியதை கொடுத்து தர வேண்டியது பெறுவதற்கு உங்களுக்கு தெரியாதா எனக் கேட்டிருக்கிறார்.

இதுவரை இந்த பட்டா மாறுதல் தொடர்பாக யாரும் எனக்கு பணம் தரவில்லை அப்புறம் எப்படி நான் வேலை செய்யமுடியும்எனவும்கேட்டிருக்கிறார்.பிறகு,முதல்வரின் முகவரி என்னும் இணையதளத்தில் அந்த நில உரிமையாளரின் பெயரில் பட்டா மாற்ற விண்ணப்பம் ஆன்லைனில் விண்ணப்பிக்கப்படுகிறது. ஆனால், இதுவரை இந்த பட்டா மாற்ற விண்ணப்பம் தொடர்பாக குறிப்பிட்டு வட்டாட்சியர் விண்ணப்பத்தை கண்டு கொள்ளவே இல்லை. ஒரு பட்டா மாற்ற விண்ணப்பம் மட்டுமேவருடக்கணக்கில்வருவாய்துறைஇழுத்தடிக்கிறது எனில் பொதுமக்களுடைய ஏனைய வேண்டுதலுக்கு எப்படி செவிசாய்க்கும் என்ற கேள்வி இயற்கையாகவே எழுகிறது.

இது போன்ற குறைகள் எல்லாம் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாக மட்டுமே. அரசு பொது மக்களுக்கு வழங்கும் எந்த ஒரு திட்டமும் பொது மக்களை சென்றடைய வருவாய் இல்லாமல் வருவாய்த் துறையினர் செய்வதே இல்லை என்ற நிலை தற்போது வரை துளி கூட மாறாமல் அப்படியே உள்ளது.

வருவாய்த்துறையினரால்ஆய்வுக்குமேற்கொள்ளப்படும் மக்கள் குறைதீர்க்கும் மனுக்கள், மனுநீதி திட்டம் மனுக்கள், சான்றுகள் வழங்கும் பணிகள், இயற்கை சீற்ற நலத்திட்ட உதவிகள் போன்ற அனைத்தும் கையூட்டு இல்லாமலும்,காலதாமதம் இல்லாமலும் பொதுமக்களுக்கு கிடைக்க வழிவகை செய்ய ஒரு அரசு முயன்றால் மட்டும் போதும் போதாது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மனசாட்சியுடனும், நேர்மையுடனும், லஞ்சம் தவிர்த்தும், மக்கள் சேவை இறைவனுக்கு செய்யும் சேவையாக கருதி தன்னலம் இல்லாமல் செயல்பட்டால் மட்டுமே எதிர்வரும் நமது சந்ததியினர் இந்த அநீதிகளுக்கு எதிரான செயல்பாடுகளை தன்னகத்தே கொண்டு வளர தூண்டுகோலாக அமையும் என்பதில் மிகையில்லை.

# ஓரியைத் தேடி ஓர் பயணம்....


வல்வில் ஓரி வீழ்ந்த துக்கத்தில் இருந்த அதியமான், சேர மன்னனின் நட்பைப்பெற்ற அரிசில்கிழாரை வரவேற்று, உபசரித்து பின் தன்னுடைய வேதனையை பகிர்ந்து வல்வில் ஓரியின் வீழ்ச்சிக்குக் காரணமான பெருஞ்சேரல் இரும்பொறையின் மீதான பகைமையை எதிர்வரும் போரிலே நிலைநாட்டி அவனை வீழ்த்துவதே தனது லட்சியமாக தெரிவிக்கலானான்.

இதனால், அரசில்கிழார் பெருஞ்சேரல் இரும்பொறையின் படைபலம் மிகவும் பெரியது, அவனை தற்பொழுது எதிர்த்தல் சாதுரியமாகாது என தனக்கேயுரிய விசுவாசத்துடனும், அதியனது கோபத்தை திசை திருப்பும் வகையிலும் அறிவுரை வழங்கலனார்.

பின், அதியமானின் கோபம் நேராக மலையமான் திருமுடிக்காரியை நோக்கி உழன்றது. அதியமானுடனான அரிசில்கிழாரின் சந்திப்பிற்கு பின் மலையமான் மற்றும் சேரமானின் வஞ்சத்தால் வீழ்ந்த அதியமானின் உற்ற நண்பன் வல்வில் ஓரியின் இழப்புக்குப் பழிதீர்க்க மலையமான் மீது கோபம் கொண்டு படைதிரட்டி திருக்கோவிலூர் திசை நோக்கி திரும்பலானான் தகடூர் தலைவன்.

மலையமானுக்கும், அதியமானுக்கும் நடைபெற்ற கடும்போரில் அதியமானின் வீரத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் மலையமானின் படைகள் பின் வாங்கின. மலையமான் உயிர் பிழைத்தால் போதும் என புறமுதுகிட்டு ஓடி சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறையின் கால்களில் தஞ்சம் புகுந்தான்.

தஞ்சம் புகுந்த மலையமான் பெருஞ்சேரல் இரும்பொறையின் மனதிற்குள் அதியமான் மீதான வஞ் சத்தை மேலும் தூண்டலானான். இருவருக்குமீதான உரையாடலில் பெருஞ்சேரல் இரும்பொறை, மலையமானிடம் அதிகமான அனைவரும் மிகவும் நல்லவன் ஈகைத்திறன் வாய்ந்தவன் என கூறுகிறார்களே என்று கூறவே, திருமுடிக்காரி பதிலுக்கு ஒரு அரசன் எவ்வளவு நல்லவனாக இருந்தாலும் தன்னுடைய எல்லையை விரிவு படுத்த அல்லது பிற தேசத்தின் மீது ஆதிக்கத்தை செலுத்த படையெடுப்பானாகில், அவனை எப்பொழுதும் ஆபத்தானவனாகவே கருத முடியும் என்று கூறி, ஓரியை எளிமையாக தீர்க்க முடிந்த என்னால் அதியமான் மீது ஆதிக்கம் செலுத்த முடியவில்லை.



நீங்கள் அதியமான் மீது படையெடுக்க சம்மதிக்க வேண்டும். உங்களை நம்பி நான் வந்து விட்டேன், இந்த முடிவில் மாற்றம் ஏற்படுமேயாகில், நான் அதியமானுடனான போரில் அவனிடமே மாண்டிருந்தால் அது இதைவிட சிறப்பானதாகவே வரலாறு கருதும்.

நீங்கள் அதிகமானிடம் போர் தொடுப்பதற்கு சம்மதம் கொடுங்கள் அதியமானை வீழ்த்துவதற்கான உபாயம் மற்றும் பின்புலத்தை நான் உங்களுக்கு செய்து கொடுக்கிறேன் என ஒருவாறு பேசி பெருஞ்சேரல் இரும்பொறையை அதியமான் மீது போர் தொடுக்க சம்மதிக்க வைத்து விட்டான் மலையமான் மன்னன். அதியமான் எப்போதும் நமக்குப் பகைவனாக இருக்கிறான்.

அவனுடைய குடியே சேரர்களுக்குத் தீங்கு எண்ணும் குடி. தாங்களே சேர மன்னர்களாக அறிவித்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அதியர் குலத்தினருக்கு இருந்துவருகிறது. அதிகமான் நெடுமான் அஞ்சி வர வரப் பல நாடுகளை வலியச் சென்று போரிட்டுத் தன் ஆட்சியின் கீழ் கொண்டுவருகிறான். அவனுடைய செயலால் நாடு இழந்தவர்கள் பலர் என யோசித்து அதியமான் மீது படையெடுப்பது என்ற தீர்க்கமான முடிவை சேர மன்னன் எடுத்து விட்டான்.

பிறகு, பெருஞ்சேரல் இரும்பொறை தனது மந்திரி பரிவாரங்களுடனும், தனது அரசுக்கு நட்புடன் திகழும் வேளிர் மன்னர்களையும் அழைத்து அதிகமானை எதிர்க்க நமது படை தகுதியானதா என்பது பற்றி ஆலோசிக்க துவங்கினான்.

ஒற்றர்களை அனுப்பித் தகடூரில் உள்ள அமைப்புக்களையும், படையின் அளவு முதலிய வற்றையும் தெரிந்துகொண்டு வரும்படி ஏவினான்.

அதியமான் கோட்டை பரந்து விரிந்த இடத்தை உடையது. மண்ணை அரைத்து வெல்லம், முட்டைப்பசை, வேறு பசைகள் ஆகியவற்றைக் கலந்து குழைத்து அமைத்தது.

செம்பினால் செய்தது போன்ற வலிமையை உடையது. உறையூர், வஞ்சி, மதுரை போன்ற மாநகரில் உள்ள மதில்களைப்போன்ற சுற்று வட்டம் இல்லாவிட்டாலும், இக்கோட்டை மதில்கள் உறுதியானவை. உள்ளே மேடைகளும், அம்பை மறைவாக நின்று எய்யும் புழைகளும், குவியல் குவியலாக இரும்புத் துண்டு களையும், வறுத்த மணலையும் வீசி எறியும்படியான மறைவிடங்களும் இருந்தன.

கோட்டையைச் சுற்றிலும் ஆழமான அகழியொன்று இருந்தது. அதன் மேல் வேண்டியபோது போடவும் போர் வந்தால் எடுத்துவிடவும் எளிய பாலங்கள் இருந்தன. அகழியில் முதலையை விட்டு வளர்த்து வந்தார்கள். எவ்வளவு வலிமை இருந்தாலும் அகழியைத் தாண்டுவது அரிது. ஏதேனும் தந்திரம் செய்து அதைக் கடந்தாலும் மதிலின்மேல் ஏற முடியாது. மதில் வாயிற்கதவுகளோ வைரம்பாய்ந்த . மரத்தால் ஆனவை. இரும்புத் தகடுகளாகியபோர்வையைஉடையவை.மதில்கதவுகளை யானைகளைக் கொண்டு முட்டி மோதித் திறப்பது பழங்காலப் போர் முறை, தம்கொம்புகளால் குத்தியும் மத்தகத்தால் மோதியும் யானைகள் கதவுகளை உடைக்க முயற்சித்தாலும் தகடூரில் உள்ள கோட்டைக் கதவுகளைச் சிதைப்பது இயலாத செயல்.

இதுதவிர கோட்டையில் மற்றொரு வசதி இருந்தது. கோட்டையிலிருந்து வெளியே யாரும் அறியாமல் வரும்படியாக நிலத்துக்கு அடியில் ஒரு சுருங்கை வழி(சுரங்க பாதை) இருந்தது. அப்படி ஒன்று உண்டு என்பதை அதிகமானும், அவனுக்கு மிகவும் வேண்டிய சிலருமே அறிவார்கள். அவனுடைய மனைவிக்கும் தெரியும். ஏதேனும் தீங்கு கோட்டைக்குள் நேர்ந்து, வாயிலும் அடைபட்டிருந்தால் அந்தச் சுருங்கையின் வழியாக வெளியேறிவிடலாம். எதிர்பாராதபடி கோட்டைக்குள் தீப்பற்றிக் கொண்டால் அச்சுரங்க வழியில் எப்போதும் போக்குவரத்து இருந்து கொண்டிருந்தால்தான் சமயத்துக்கு உதவுமென்று அறிந்த அதியமான் நள்ளிரவில் அச்சுரங்க வழியே புறப்பட்டுச் சென்று. புறத்தே இருந்த நகரில் மாறுவேடத்தில் உலாவிவிட்டு வருவான்.

இதனால் நகர் சோதனையும், சுரங்க வழிச் சோதனையும் ஒரேநேரத்தில் நிகழ்ந்தன. மறுபுறம் தனது மந்திரி சபை பிரதானிகளுடன் ஆலோசனையில் ஈடுபட்டு அதியமான் மீது போர் தொடுக்க முடிவு செய்த சேர மன்னன் பெருஞ் சேரல் இரும்பொறை தனது படை தளபதிகளை ஒருங்கிணைத்து முதன்மை தளபதியான பிட்டங்கொற்றன் என்பவன் தலைமையில் படையெடுக்க தீர்மானித்து விட்டான் இந்தப் படைக்கு ஆலோசனை வழங்கவும் பின்புலத்திலிருந்து வழிநடத்திச் செல்லவும் மலையமான் திருமுடிக்காரியை பயன்படுத்திக் கொள்வது எனவும் தீர்மானித்தான்.

பின்னர் மலையமான் திருமுடிக்காரி அதியமானுக்கு அஞ்சிசேரமன்னன்பெருஞ்சேரலிடம் அவனது ஆட்சிக்கு உட்பட்ட பகுதியில் தலைமறைவாக இருப்பது அவனுடன் சேர்ந்து தோற்று புறமுதுகிட்டு ஓடிய பிற படை தளபதிகளுக்கும் போர் வீரர்களுக்கும் தெரிந்து அவர்களும் மலையமான் திருமுடிக்காரியிடம் வந்து ஒரு சேனையாக அமைந்தனர்.

ஒரு பகுதியை ஆட்சி பரிபாலனம் செய்யும் ஒரு மன்னனை திடுமென எதிர்ப்பது அல்லது படை கொண்டு தாக்குவது மரபு இல்லையாதலால், அதியனுக்கு ஒற்றர் மூலம் செய்தி அனுப்ப நாள் குறிக்கப்பட்டது. எழுத்தாணி கொண்டு எழுதிய அந்த ஓலைச்செய்தியில், “பெருஞ் சேரல்இரும்பொறையாகிய நான் உங்கள் நாட்டின் மீது போர் தொடுக்கிறேன்” என்று எழுதவில்லை.

மாறாக “நீர்! (அதியமான்) மலையமானின் தேசமாகிய திருக்கோவிலூர் தேசத்தை அதிரடியாக படையெடுத்து ஆக்கிரமித்து விட்டபடியால் முறையாக அந்த தேசத்தை காரியிடம்ஒப்படைத்து விடும்என்றும்,மறுக்கும்பட்சத்தில் காரியின் சார்பில் யாம்(பெருஞ்சேரல் இரும்பொறை) தங்கள் மீது படை எடுக்க நேரிடும்” எனப் பொருள்படும்படியான குறிப்புடன் ஒற்றர் மூலம் பறந்தது செய்தி... தகடூர் தேச தலைவனின் நோக்கி...

தூதுவன் தகடூரை அடையுமுன்பே ஒற்றர்கள் மூலம் சேரன் தலைநகரில்

நடைபெறும் போர் முயற்சிகளை அறிந்தானாதலால் தூதோலை கண்ட அதியமான் அதனை படித்துப் பார்த்தான் உடனே அமைச்சர், படைத் தலைவர், சான்றோர்கள் ஆகியவர்களை அழைத்து அவை கூட்டினான். மந்திரி ஆலோசனையில் யாவரும்

ஈடுபட்டனர்.பெரியவர்கள்திருக்கோவலூரைக்கொடுத்து விடலாம் என்றார்கள். படைத்தலைவர்கள் அதற்கு இசையவில்லை. கடைசியில் போரையே வரவேற்பதென்று முடிவாயிற்று, **பாம்பின் வாயில் புகுந்த தேரை மீண்டாலும் மீளும், அதிகமான் கையில் சிக்கியது மீளாது என்பதைச் சேரன் தெரிந்து கொள்ளட்டும்!" என்று தூதுவனிடம் விடைகொடுத்து அனுப்பிவிட்டான்.

போரின் வருகையை தெரிந்து கொண்ட அதியமான் தன் கோட்டையின் ஒவ்வோர் அங்குலத்தையும் கவனித்துச் செப்பனிடலானான். அகழியின் கரைகளைச் சரிப்படுத்தினான். மதிலின் சிதைந்த பகுதிகளைக் கட்டுவித்தான். மற்றப் பகுதிகளைப் பின்னும் உறுதியாக்கினான். மதிலின் மேல்உள்ள பொறிகளைச் சீர்ப்படுத்தினான் . அம்பு எய்யும் எப்புழைகளைத் தடை ஏதும் இல்லாமல் அமைக்கச் செய் தான். .கோட்டைக்குள் இருந்த படை வீரர்களைப் போருக்கு ஆயத்தம் செய்யச் செய்தான். கோட்டைக்குள் இன்றியமையாதவர்களை மாத்திரம் வைத்துக் கொண்டு மற்றவர்களை வெளியிலே நகரத்தில் போய் இருக்கச் சொன்னான்.

நகரில் இருந்த வீரர்களையும் படைக்கலப் பயிற்சியுடைய மைந்தர்களையும் அழைத்துக் கோட்டைக்குள்ளே இருக்கும்படி ஏவினான். பெருஞ்சேரல் இரும்பொறை படை எடுத்துவந் தால் எதிர் சென்று போரிட்டு அவனை ஒட்டுவதை அதிகமான். விரும்பவில்லை. அதற்குப் பெருமுயற்சி வேண்டும்.

தன் நாட்டுக்கு வெளியிலோ அல்லது உள்ளேயோ ஒரு போர்க்களம் உருவாகும். போர் செய்யத் தொடங்கினால் பலர் மடிவார்கள். இவற்றிற்கெல்லாம் இடமின்றிப்பெட்டிக்குள் அடங்கிய பாம்புபோல் கோட்டைக்குள். இருந்தால், சேரன் வந்து கோட்டையை முற்றுகையிடுவான். மதிற்பொறி களையும், மறைவிடத் திலிருந்து அம்புகளையும் ஏவி அந்தப் படைக்குச் சேதம் விளைவிக்கலாம்.

பகைப் படைகளால் அகழியைத் தாண்டவோ கோட்டையைக் குலைக்கவோ இயலாது. சில காலம் முற்றுகையிட்டுவிட்டுச் சோர்வடைந்து சேரன் தன் நாட்டுக்கே மீண்டு விடுவான். இவ்வாறு தன் மனத்துள் எண்ணிக்கொண்டான் அதியமான். வந்த படை நெடுங்காலம் விட்டு அகலாமல் கோட்டையைச் சூழ்ந்து முற்றுகை யிட்டிருந்தால் என்ன செய்வது என்ற கவலை அவனுக்கு இல்லை.

இரகசியமாகச் சுரங்க வழியில் உணவுப் பண்டங்கள் வருவதற்கு ஏற்பாடு செய்யலாம் என்ற நம்பிக்கை இருந்தது. சான்றோர்கள் இந்தக் கருத்துக்கு இசைந்தார்கள்.

ஓலையோடு சென்று தூதுவன் திருக்கோவிலூரை விட முடியாது என்ற சேதியோடு திரும்பி வந்ததை அறிந்த சேரமன்னன் இதனை போருக்கு வா என்று அதியமான் தன்னை அழைப்பதாகவே கருத்தில் ஏற்றி தனது படை பரிவாரங்களோடு வஞ்சிமாநகரை விட்டு தகடூர் நோக்கி நகரலானான்.

அதியமானின் கோட்டைக்குள் நுழைந்து பகைவர்கள் மேல் அம்பும் பிற படைகளும் வீசி ஓடச் செய்ய, இன் னதை இன்னபடி செய்யவேண்டும் என்று திட்டம் வகுத்தான். அவசியத்தினால் கோட்டையை விட்டு வெளியே வரவேண்டுமானால் அப்போது இன்னது செய்யவேண்டும் என்பதையும் வரையறை செய்தான்.

சேர மன்னன் படை புறப்பட்டுவிட்டது என்பதை அறிந்த அதியன், எவ்வளவு உணவுப் பொருட்களைக் கோட்டைக்குள் சேமித்து வைக்கலாமோ, அவ் வளவையும் வைத்துக்கொண்டான். அகழியினுள் பாலங்களை யெல்லாம் உள்வாங்கச் செய்தான்.

கோட்டைக் கதவுகளை மூடித் தாழிடச் சொன்னான். சேரன் படை வேகமாக வந்தது. யானைப் படையை முன்னாலே விட்டுப் பின்பு குதிரைப் படையை விட்டார்கள். அப்பால் தேர்ப்படை சென்றது. கடைசியில் காலாட்படை கடல்போலத் திரண்டு நடந்தது. சேரன், அதிகமான் நாட்டுக்குள் வந்துவிட்டான்.

யாரும் அவனை எதிர்ப்பார் இல்லை. திடீரென்று எங்கிருந்தாவது படை வந்து தாக்குமோ என்று எதிர்பார்த்தான். ஒன்றும் வரவில்லை. சேரன் வியந்தான். 'ஒருகால் அதியன் சமாதானம்செய்து கொள்ள விரும்புகிறானோ?'.என்றுகூடநினைத்தான்.நாட்டுக்குள் படை நடந்துகொண்டிருந்தது. நாட்டு மக்கள் அவர்களை எதிர்கொள்ளவில்லை, போவதற்கு இடம் கொடுத்து விலகியிருந்தார்கள்.

படை தகடூரை அடைந்துவிட்டது. அதியமான் கோட்டைக்குள் இருக்கிறான் என்பதை உணர்ந்தான் சேரமன்னன். யானைப் படைகளைக் கொண்டு கோட்டையைத் தாக்கவேண்டும் என்று தீர்மானித்தான். கோட்டைக்குமுன் அகழி இருந்தது. அதைத் தாண்டிச் சென்றால் தானே கோட்டையைத் தாக்கலாம்? கோட்டையோடு ஒட்டி ஆழமாக இருந்தது அகழி.

கோட்டை மதிலுக்கும் அதற்கும் இடைவெளியிருந்தால் அங்கே நின்று கோட்டையை இடிக்கலாம்.

அதற்கும் வழியில்லை. கோட்டை வாயில்கள் உள்ள இடங்களில் புதிய பாலங்களை அமைத்துச் சென்று யானை களைக்கொண்டுகதவுகளை மோதிச் சிதைக்கலாம். பாலம் போட வழி? பெரிய பெரிய மூங்கில்களை கொண்டுவந்து போட்டுப் பாலம் கட்டவேண்டும்.

சாத்தியமா !? இல்லை. "அகழி ஒன்று இருப்பது நமக்கு நினைவு இல்லாமற் போயிற்றே !' என சேரன் வருந்தினான். கோட்டையை முற்றுகையிடும்படி நேரலாம் என்பதையே அவன் எண்ணிப் பார்க்கவில்லையே! நேருக்கு நேர் போர்க்களத்தில் கை கலப்பதாகவே அவன் கற்பனை செய்திருந்தான்.

கோட்டை மதிலின் உயரத்தைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்செறிந்தான். கீழ் இருந்தபடியே சில அம்புகளை எய்யச் சொன்னான். அடுத்த கணம் உள்ளே இருந்து சரமாரியாக.

அம்புகள் வந்து விழுந்தன. ஏப்புழைகளின் பின்னிலிருந்து வீரர்கள் குறி பார்த்து அடித்தமையால் அம்புகள் சேரமான் யானைகளின்மீது வந்து தைத்தன. அதியமானின் வீரர்கள் கோட்டையிலே பாதுகாப்பாக இருந்தார்கள்.

அயலான் ஊரில் திறந்த வெளியில் இருந்தனர் சேரமானின் படை வீரர்கள். முதலை தண்ணீரில் இருந்தால் அதை யாரும் வெல்லுவது அரிது; யானையையும் இழுத்துவிடும். அது கரைக்கு வந்தாலோ எளிதிலே கொன்றுவிடலாம். அதிகமான் தண்ணீரில் இருந்த முதலையைப் போலஇருந்தான். சேரனோ தரையிலே கிடந்த முதலையானான்.

வெளியிலிருந்து விடும் அம்புகள் குறி பார்த்து அடித்தால் தைப்பது போலத் தைக்குமா? சேரமான் வீரர்கள் அம்பை மதிலுக்குள் விட்டுக்கொண்டே இருந்தார்கள். இருந்தும் அகழியை நெருங்க இயலவில்லை சேரனின் படை வீரர்களால்.

"சான்றோர்கள் கூறியதைக் கேளாமல் வந்தது தவறு" என்று இரும்பொறை தன்னைத்தானே நொந்து கொண்டான். முதல் நாள் இரவு சேரன் தன் பாசறையில் அமர்ந்திருந்தான்.

மலையமான் திரு முடிக்காரி, பிட்டங் கொற்றன், நெடுங்கேரளன் முதலிய படைத்தலைவர்கள் உடனிருந்தார்கள். எத்தனை காலம் புறத்தில் நின்று போர் செய்தாலும் அதிகமான வெல்ல முடியாதுபோல் இருக்கிறதே! நாம் விடும் அம்புகள் யாவுமே வீணாகின்றன.

அவர்கள் அம்புகளோ நம் யானைகளையும் குதிரைகளையும் மாய்க்கின்றன; வீரர்களையும் புண்படுத்துகின்றன. முதல் நாளிலேயே இந்தத் தடுமாற்றம் வந்தால் மேலே எப்படிப் போரை நடத்துவது?" என்று தளர்ச்சியைப் புலப்படுத்தும் குரலோடு பேசினான் சேரன்.

யாவரும் பாசறையிலே இருக்கவேண்டிய நிலை. சில வீரர்களே வில்லும் அம்புமாகக் கவசத்தை அணிந்துகொண்டு கோட்டையைச் சூழ நின்றார்கள், காரியோ, பிட்டங்கொற்றனோ குதிரையின் மேல் ஏறிக்கொண்டு கோட்டையைச் சுற்றிவந்து அங்கங்கே நின்ற வீரர்களுக்கு ஊக்கம் அளித்துவந்தனர். அங்கே நின்ற வீரர்களையன்றி மற்றவர்கள் பாசறையில் விருந்துண்டு களித்தார்கள்.

கதைபேசி இன்புற்றார்கள். யானைகளுக்கும் குதிரைகளுக்கும் ஒரு வேலையும் இல்லை. காவல் வீரர்கள் மாத்திரம் மாறி மாறி நின்றார்கள். ஐந்து நாட்கள் இப்படியே கழிந்தன. எந்த விதமான மாற்றமும் உண்டாகவில்லை. அதியமானோ உள்ளே இருந்தான். சேரன் வெளியிலே இருந்தான். போர் நடப்பதாகவே தோன்றவில்லை. மறுபடியும் சேரமான் படைத்தலைவர்களோடு ஆராய்ந்தான்.

"இப்படியே ஒவ்வொரு நாளும் போய்க் கொண்டிருந்தால் என்ன செய்வது? நாம் அயல் நாட்டில் அதியமான் வெளியே வருவானென்று காத்துக்கிடக் கிறோம்.

நம்முடைய அரண்மனை வாயிலில் தம் குறைகளைக் கூறச் காத்துக்கிடக்கும் குடிமக்களைப் போலவே இருக்கிறோம். அதியமானே உள்ளே இனிமையாக உறங்குகிறான்.

இப்படியே இருந்தால் நம் எண்ணம் என்னாவது?'' பத்து நாட்கள் ஆயின; இருபது நாட்கள் ஆயின. சேரன் பொறுமையை இழந்தான். :*நான் வஞ்சிமாநகர் செல்கிறேன். நீங்கள் இருந்து போரை நடத்துங்கள்"" என்றான்.

அப்பொழுது.

அதியமானுக்குஎதிராகநஞ்சைவிடகூடியசெய்தியோடு ஒரு வஞ்ச மகள் அவன் முன் தோன்றலானாள்.

அடுத்த இதழில்...

# கமிஷனர் நியமிக்கப்படவில்லை? ரூ.132 கோடியில் சாலை அமைக்கும் பணி மாநகராட்சி வார்டுகளில் முடக்கம்: தொகை என்ன ஆனது?



ஈரோடு மாநகராட்சியில், 60 வார்டுகளில் சேதமான சாலைகளை சீரமைக்க, புதியதாக தார்ச்சாலை அமைக்க, 132.52 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. இதை தொடர்ந்து, 2023 ஜூலை மாதம், மாநகராட்சி பகுதிகளில் சாலை சீரமைக்கும் பணி, 284 கி.மீ., துாரத்துக்கு தார்ச்சாலை அமைக்கும் பணி தொடங்கப்பட்டது.

பணிகளை, 2024 ஜனவரியில் முடிக்க திட்டமிட்டனர். ஆனால், பல இடங்களில் ஜல்லி கொட்டி சாலை சமன்படுத்தப்பட்ட நிலையில், தார்ச்சாலை அமைக்கும் பணி நடக்காமல் முடங்கியுள்ளது.தற்போது ஜல்லி பெயர்ந்து வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. லோக்சபா தேர்தல் நடத்தை விதியை காரணம் காட்டி அதிகாரிகள் ஒத்திப்போட்டு வந்தனர். நடத்தைவிதிகளைவிலக்கிபலவாரமாகியநிலையிலும், பணியை தொடங்காமல் உள்ளனர்.எனவே சாலை அமைக்கும் பணியை, மேலும் கிடப்பில் போடாமல், விரைந்து மேற்கொள்ள கோரிக்கை எழுந்துள்ளது.

இதுகுறித்து சமூக ஆர்வலர்கள் கூறுவது

ஈரோடு கமிஷனர் பணி மாறுதல் தமிழக அரசு உத்தரவிட்டது,, தற்போது மாநகராட்சி கமிஷனர் நியமிக்கப்படவில்லை? இதனால் 4 மண்டலம் உதவி ஆணையர்களுக்கு கொண்டாட்டம்?

கொசுமருந்து அடித்ததாக பொய்கணக்கு இதேபோல வரி புதுப்பித்தல் காலியிடம் வரி, கட்டட வரி, குடோன் வரி, ஊராட்சி கோட்டை குடிநீர் திட்டம் பைப் பிட்டிங் புதுப்பித்தல், பாதாள சாக்கடை வீட்டு பகுதியில் பைப் பிட்டிங் புதுப்பித்தல் ,, அனைத்துக்கும் வாங்கும் லஞ்சம் அளவே இல்லை என்கிறார்கள் பொதுமக்கள்?

மாநகர மண்டல உதவி கமிஷனருக்கு துணை போகும் லஞ்ச ஒழிப்புத் துறையை அதிகாரிகளை கூண்டோடு இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என்கிறார்கள் பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும்?

## கிளாம்பாக்கத்தில் 'ஸ்கைவாக்' நிலம் கையகப்படுத்த அறிவிப்பு

சென்னையில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைக்க, வண்டலுார் அடுத்த கிளாம்பாக்கத்தில், சென்னைபெருநகரவளர்ச்சிகுழுமமானசி.எம்.டி.ஏ., 400 கோடி ரூபாயில் புதிய புறநகர் பேருந்து முனையத்தை கட்டியது.

கடந்த டிசம்பர் மாதத்தில் இருந்து, இந்த முனையம் செயல்பட்டு வருகிறது.

இங்கிருந்து, சென்னையின் பல பகுதிகளுக்கு வந்து செல்ல, மாநகர பேருந்து வசதி மட்டுமே பிரதானமாக உள்ளது. ரயில் போக்குவரத்திற்காக, பேருந்து முனையம் எதிரே புதிய ரயில் நிலையம் அமைக்கும் பணியும் நடந்து வருகிறது.

இவற்றின் இடையே, ஜி.எஸ்.டி., மற்றும் தேசிய நெடுஞ்சாலை உள்ளது. இவற்றை கடக்கும்போது பயணியர் விபத்தில் சிக்கும் அபாயம் இருக்கிறது.

எனவே, பயணியர் எளிதாக சாலையை கடக்கவும், பேருந்துமுனையம்ரயில்நிலையத்தைஇணைக்கவும் வசதியாக, 'ஸ்கைவாக்' எனும் ஆகாய நடைபாலம் அமைக்கப்பட உள்ளது.

இத்திட்டத்திற்கு தேவைப்படும் 5,900 சதுர அடி தனியார் நிறுவன புன்செய் நிலத்தை கையகப்படுத்த உள்ளதாக, செங்கல்பட்டு மாவட்ட வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அறிவிப்பு வெளியிட்டு உள்ளது.

நிலம் கையகப்படுத்தலால், மறுவாழ்வு, மறுகுடியமர்வு நடைமுறைகள் எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது

# எப்படி இருந்த நான்.. இப்படி ஆயிட்டேன்.. 20 வருடத்திற்கு முன்பு டாஸ்மாக் வருமானத்தை பாருங்களேன்...!

தமிழ்நாட்டில் கடந்த 20 ஆண்டுகளாக ஒவ்வொரு வருடமும் டாஸ்மாக் மூலமாக அரசுக்கு கிடைக்கப் பெறும் வருமானத்தின் விவரம் வெளியாகியுள்ளது.

20 வருடங்களுக்கு முன்பு மிகவும் குறைவாக இருந்த வருமானம், தற்போது அசுர வளர்ச்சியை கண்டிருக்கிறது.

கள்ளக்குறிச்சியில் நிகழ்ந்த கள்ளச்சாராய மரணங்கள் தமிழக அரசு மீது கடும் விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் கள்ளச்சாராய வியாபாரத்திற்கு பின்னால், பல திமுக பிரமுகர்களும், நிர்வாகிகளும் இருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டுகின்றன.

மேலும், தமிழக அரசு நடத்தும் டாஸ்மாக் மதுக்கடைகளால் கிராமப்புறங்களில் பலர் மது போதைக்கு அடிமையாகி இருப்பதும், சில நேரங்களில் கையில் போதிய பணம் இல்லாத போது குறைந்த காசுக்கு கிடைக்கும் சாராயத்தை நாடி, இதுபோன்ற ஆபத்தில் சிக்கி விடுவதாகவும் எதிர்க்கட்சிகள் தெரிவிக்கின்றன.

நிலைமை இவ்வாறு இருக்க, கடந்த ஆண்டை விட டாஸ்மாக் வருமானம் இந்த ஆண்டு பல மடங்கு அதிகரித்துள்ளதாக வந்துள்ள செய்தி பலரையும் கொதிப்படையச் செய்திருக்கிறது. அதாவது, கடந்த 2022 – 23ம் நிதியாண்டில் ரூ. 44,121.13 கோடியாக இருந்த டாஸ்மாக் வருமானம், 2023 – 24ம் நிதியாண்டில் ரூ.45,855.67 கோடியாக உயர்ந்திருக்கிறது. அதாவது, ஒரே வருடத்தில் டாஸ்மாக் வருமானம் ரூ.1,734.54 கோடி உயர்ந்திருக்கிறது. அதாவது, மதுவுக்கு அடிமையாவோரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதை தான் இந்த செய்தி காட்டுகிறது.

இந்நிலையில்தான், டாஸ்மாக்கில் சில்லறைவிற்பனை தொடங்கப்பட்ட 2003ம் ஆண்டு முதல் இப்போது வரை ஆண்டுக்கு எவ்வளவு வருமனத்தை ஈட்டுகிறது




என்பது தொடர்பான தகவலை நாங்கள் சேகரித்துள்ளோம். அதன்படி, 2003–04ம் நிதியாண்டில் டாஸ்மாக் மூலமாக ஆண்டுக்கு தமிழக அரசுக்கு ரூ.3,693.93 கோடி வருமானம் கிடைத்துள்ளது. அதன்படி, 2004 – 05ம் நிதியாண்டில் ரூ. 4,872.03 கோடி வருமானமும், 2005 06ம் நிதியாண்டில் 6,030 கோடி வருமானமும் கிடைத்துள்ளது. அதுவே, 2006–07ம் நிதியாண்டில் ரூ. 7,473 கோடியாக அதிகரித்துள்ளது.

இவ்வாறு 2007 – 08ம் நிதியாண்டில் ரூ. 8,821.16 கோடி, 2008 – 09 நிதியாண்டு ரூ.10,601 கோடி, 2009 – 10ம் நிதியாண்டு ரூ.12,498 கோடி, 2010–11ம் நிதியாண்டு ரூ.14,965.42 கோடி, 2011 – 12 நிதியாண்டு ரூ.18,081.16 கோடி, 2012– 13 21,680 கோடி, 2013 –14ம் நிதியாண்டு ரூ. 21,674.89 கோடி, 2014–15ம் நிதியாண்டு ரூ.24,164 கோடி. 2015 –16ம் நிதியாண்டு ரூ.25,845 கோடி, 2016 – 17ம் நிதியாண்டு ரூ.26,995 கோடி, 2017 – 18 ம் நிதியாண்டு ரூ.26,797 கோடி, 2018 – 19ம் நிதியாண்டு ரூ.31,157 கோடி, 2019 – 20ம் நிதியாண்டு ரூ.33,133.24 கோடி, 2020– 21ம் நிதியாண்டு ரூ.33,811 கோடி, 2021 – 22ம் நிதியாண்டு ரூ.36,050.65 கோடி, 2022 –23ம் நிதியாண்டு ரூ.44,121 கோடி, 2023 –24ம் நிதியாண்டு ரூ. 45,855.67 கோடி.

# ஒருத்தருக்கு எத்தனை மது பாட்டில் விற்கலாம்? விதி உருவாக்க கோரிக்கை

மொத்தமாக மது பாட்டில்களை வாங்கி பதுக்குவதை தடுக்க, ஒருவருக்கு எத்தனை பாட்டில் விற்கப்பட வேண்டும் என்ற விதிமுறையை வெளியிடுமாறு, டாஸ்மாக்கிற்கு ஊழியர்கள் கோரிக்கை



விடுத்துள்ளனர்.

இதுகுறித்து, தமிழக டாஸ்மாக் பணியாளர்கள் சங்க பொதுச்செயலர் தனசேகரன் கூறியதாவது:

மது வாங்க வருவோர், ஒரு பாட்டில், இரு பாட்டில் என வாங்குவர். மதுக்கூடங்களுக்கு மது அருந்த வருவோர், நேரடியாக மதுக்கூடத்திற்கு சென்று, அங்கு பணிபுரியும் ஊழியரிடம் மது வாங்கி வரச் சொல்லி அனுப்புகின்றனர்.

அவர்களும் ஒரு மேஜைக்கு இரண்டு, மூன்று பாட்டில் வீதம், 4 5 மேஜைகளுக்கு சேர்த்து, ஒரே சமயத்தில் மொத்தமாக மது பாட்டில்களை வாங்கிச் செல்கின்றனர். இது, மது அருந்த வந்தவர்களுக்கு வாங்கப்படுகிறதா அல்லது பதுக்கி விற்க வாங்கப்படுகிறதா என்பது, மதுக்கடை ஊழியர்களுக்கு தெரிய வாய்ப்பில்லை.

கள்ளச்சந்தையில் மது பாட்டில்கள் விற்கும் போது, போலீசாரிடம் பிடிபட்டு விசாரணையில், 'எங்கிருந்து இவ்வளவு பாட்டில் வந்தது' என்று கேட்டால், ஊழியர்களை கைகாட்டி விடுகின்றனர். இதனால், டாஸ்மாக் ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இந்த பிரச்னைக்கு தீர்வு காண, தனிநபர் ஒருவருக்கு ஒருமுறை எத்தனை பாட்டில் விற்கப்பட வேண்டும் என்ற விதிமுறையை டாஸ்மாக் உருவாக்கி, விரைவில் வெளியிட வேண்டும். மதுக்கூடத்தில் பணிபுரிவோருக்கு, 'ஆதார்' உள்ளிட்ட அடையாள ஆவணம் பெற்று மது விற்க வேண்டுமா எனவும், டாஸ்மாக் நிர்வாகம் தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## 61,000 ரேஷன் கார்டு தான் ஓராண்டில் வினியோகம்

ரேஷன் கடைகளில் மானிய விலையில் வழங்கப்படும் உணவு பொருட்கள் மற்றும் பொங்கல் பரிசு தொகுப்பு, பேரிடர் நிவாரணம் போன்றவற்றை வாங்க ரேஷன் கார்டு அவசியம். ஆண்டுதோறும் சராசரியாக, ஒரு லட்சத்திற்கும் அதிகமான புது கார்டுகள் வழங்கப்படும். அதன்படி, 2022 23ல், 2.21 லட்சம் ரேஷன் கார்டுகளும்; அதற்கு முந்தைய ஆண்டில், 7.50 லட்சம் கார்டுகளும் வழங்கப்பட்டுள்ளன. தமிழக அரசு மகளிருக்கு மாதம், 1,000 ரூபாய் வழங்கும் திட்டத்தை, 2023 செப்டம்பரில் துவக்கியது. இதற்காக, அனைத்து ரேஷன் கார்டுதாரர்களுக்கும் விண்ணப்பம் வழங்கப்பட்டு, அரசு விதித்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு, பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர். இதனால், பலரும் ரேஷன் கார்டு கேட்டு விண்ணப்பித்தனர். அந்தாண்டு ஜூலை முதல் பயனாளிகளுக்கு புதிய கார்டு வழங்கப்படவில்லை. எனவே, 2023 24ல், 61,047 ரேஷன் கார்டுகள் தான் வழங்கப்பட்டுள்ளன. அதேசமயம், புதிய கார்டு கேட்டு, 2 லட்சத்திற்கும் அதிகமானோர் விண்ணப்பித்து இருந்தனர்.



# யானை வழித்தடத்தில் பண்ணை அரசுக்கு ஐகோர்ட் எச்சரிக்கை

கல்லாரில் யானைகள்வழித்தடத்தில் உள்ள தோட்டக்கலை பண்ணையை இடமாற்றம் செய்யாவிட்டால், நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்க நேரிடும் என, சென்னை உயர் நீதிமன்றம் எச்சரித்துள்ளது.

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் கல்லார் பகுதியில் யானைகள் வழித்தடத்தில் தோட்டக்கலை துறைக்கு சொந்தமான பண்ணை உள்ளது.

அதை வேறு இடத்துக்கு மாற்றி, நிலத்தை வனத்துறையிடம் ஒப்படைக்க உத்தரவிடக் கோரி, மனோஜ் இமானுவேல் என்பவர் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, 'யானை வழித்தடத்தில் உள்ள பண்ணையை வேறு இடத்துக்கு மாற்றுவது தொடர்பாக, அரசின் கருத்தை அறிந்து தெரிவிக்க அவகாசம் கோரப்பட்டது.

'இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக அரசு, எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நீதிமன்ற உத்தரவை செயல்படுத்துவதில் குறைந்தபட்ச மரியாதையாவது கொடுக்க, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அரசு அறிவுறுத்த வேண்டும்' என, நீதிபதிகள் தெரிவித்தனர்.

மேலும்,கல்லார்தோட்டத்தைஇடமாற்றுவதுதொடர்பாக, அரசின் கருத்தை அறிந்து தெரிவிக்கும்படி உத்தரவிட்ட நீதிபதிகள், நீதிமன்ற உத்தரவை அமல்படுத்தாவிட் டால், தோட்டக்கலை துறை செயலருக்கு எதிராக நீதிமன்ற





அவமதிப்பு நடவடிக்கை எடுப்பதை தவிர வேறு வழி யில்லை என்றும் எச்சரித்தனர்.

பின், வழக்கு விசாரணையை ஆக., 7க்கு தள்ளி வைத்தனர்.

மற்றொரு வழக்கு

தமிழகத்தில் யானைகள் வழித்தடங்கள் குறித்து, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு செய்ய வேண்டும்; கோவை சாடிவயல் பகுதியில், யானைகள் மறுவாழ்வு மையம் அமைக்கவும், தமிழ்நாடு தொழில்நுட்ப நகர கட்டுமானத்துக்கு தடை விதிக்க வேண்டும் என, சென்னை கோட்டூர் பகுதியைச் சேர்ந்த விலங்குகள் நல ஆர்வலர்எஸ்.முரளிதரன்மனுக்கள்தாக்கல்செய்திருந்தார்.

விசாரணை

இந்த மனுக்களுக்கு பதிலளிக்கும்படி, மத்திய,மாநில அரசுகளுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்த வழக்குகள், நீதிபதிகள் என்.சதீஷ்குமார், டி.பரத சக்ரவர்த்தி அடங்கிய சிறப்பு அமர்வில், நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தன.

அப்போது, இந்த மனுக்களுக்கு மாநில அரசு தரப்பில் எந்த பதில் மனுவும் தாக்கல் செய்யவில்லை என, மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, வழக்கு விசாரணையை ஜூலை 5 வரை தள்ளிவைத்த நீதிபதிகள், அதுவரை தமிழ்நாடு தொழில்நுட்ப நகர கட்டுமான பணிகளை பொறுத்தவரை, தற்போதைய நிலையே நீடிக்க வேண்டும் என உத்தரவிட்டனர்.

# மகளிருக்கு கர்ப்பப்பை வாய் புற்றுநோய்க்கு இலவச தடுப்பூசி

"மாநிலம் முழுதும் உள்ள இளம் மகளிருக்கு, மத்திய அரசு உத்தரவுப்படி கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி செலுத்தப்படும்," என, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சுப்பிரமணியன் பேசினார்.

சட்டசபையில் அவரது பதிலுரை:

அரசு மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை 120 சதவீதம் கூடியுள்ளது. புற்றுநோய் என்பது மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் நிலையில் உள்ளது.

ஈரோடு, திருப்பத்துார், கன்னியாகுமரி, ராணிப்பேட்டை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில், தோல் பதனிடும் தொழிற்சாலைகள் உள்ள பகுதிகளில் புற்றுநோய் பாதிப்பு அதிகரித்து வருகிறது.


அங்குள்ள 2.50 லட்சம் பேரை பரிசோதித்ததில், 76 பேருக்கு தொடக்க நிலை பாதிப்பு இருந்தது கண்டறியப்பட்டு, சிகிச்சை அளிக்கப்படுகிறது. கடந்த ஒன்பது ஆண்டுகளில், அ.தி.மு.க., ஆட்சியில், மக்கள் நல்வாழ்வு துறைக்கு 79 விருதுகள் கிடைத்தன. ஆனால், மூன்றாண்டு கால தி.மு.க., ஆட்சியில், 545



விருதுகள் கிடைத்துள்ளன.

ஆனால், எல்லாவற்றிற்கும் குஜராத் மாநிலத்தை உதாரணம் கூறுகிறோம். குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த 60 மருத்துவ வல்லுனர்கள் தமிழகம் வந்து, இங்குள்ள மருத்துவ கட்டமைப்புகளை ஆய்வு செய்தனர்.

தமிழகத்தில் உள்ள மருத்துவ கட்டமைப்புகள் குஜராத்திற்கு வருவதற்கு, 20 ஆண்டுகள் ஆகும் என கூறிச் சென்றனர்.



மகளிர் இளம் பருவத்தினருக்கு கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி போட வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது.

இதையடுத்து, திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, சென்னை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில், இத்திட்டத்தைசெயல்படுத்தமுடிவுசெய்யப்பட்டது.

ஆனால், நாடு முழுதும் தடுப்பூசி போடும் திட்டத்தை செயல்படுத்த, மத்திய அரசு முடிவெடுத்துள்ளது. தமிழகத்திற்கு தடுப்பூசிகளை தருவதாக சொல்லியுள்ளனர். எனவே, விரைவில் மாநிலம் முழுதும் தடுப்பூசி திட்டம் செயல்படுத்தப்படும்.

இவ்வாறு அமைச்சர் பேசினார்.

# சென்னை சிறுவன் மரணம்: குடிநீரை கூட சுத்தமாக வழங்க முடியவில்லையா? எடப்பாடி பழனிசாமி ஆத்திரம்

சென்னையில் கழிவுநீர் கலந்த குடிநீரை குடித்து 11 வயது சிறுவன் உயிரிழந்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பாக தமிழக அரசுக்கு அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்த அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

சென்னை சைதாப்பேட்டையில் கழிவுநீர் கலந்த குடிநீர் குடித்த 11 வயது சிறுவன் உயிரிழந்ததாக வரும் செய்தி அதிர்ச்சி அளிக்கிறது. ஏற்கனவே, தமிழ்நாடு முழுவதும் கடந்த ஒரு மாதத்தில் சுகாதாரமற்றக் குடிநீரால் 10 பேர் உயிரிழந்தததாக செய்திகள் வந்துள்ள நிலையில், தலைநகர் சென்னையிலும் இப்போது உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. விடியா திமுக ஆட்சியில் தமிழகம் முழுவதும், குறிப்பாக சென்னை மாநகராட்சியில் குடிநீர் விநியோகம் சுகாதாரமற்று இருப்பதாக பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

இருந்தபோதிலும், எந்த நடவடிக்கையும் எடுக்காமல் உயிரிழப்பு ஏற்படும் அளவிற்கு அலட்சியமாக இருந்த விடியா திமுக அரசின் குடிநீர் வழங்கல் துறைக்கும், சென்னை மாநகராட்சி நிர்வாகத்திற்கும், சென்னை மெட்ரோகுடிநீர்வாரியத்திற்கும்எனதுகடும்கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.



மக்கள் வாழ்வியலுக்கு மிக அடிப்படை தேவையான குடிநீரை கூட சுகாதாரமான முறையில் திமுக அரசால் வழங்க முடியவில்லை என்பது அரசு இயந்திரம் முழுவதும் நிர்வாக சீர்கேடு புரையோடி கிடப்பதையே காட்டுகிறது. தமிழகம் முழுவதும் குறிப்பாக, சென்னையில், குடிநீரை சுகாதாரமான முறையில் வழங்கப்படுவதை உறுதி செய்யுமாறு விடியா திமுக அரசை கேட்டுக்கொள்கிறேன் என எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

# போலீசாருக்கு பயணப்படி வழங்கப்படவில்லை: அண்ணாமலை குற்றச்சாட்டு



‘தேவையில்லாத வீண் விளம்பரங்களுக்கு, பல கோடி ரூபாய் மக்களின் வரிப்பணத்தை செலவு செய்வதில் தி.மு.க., அரசு முனைப்பாக இருக்கிறது’ என தமிழக பா.ஜ., தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார். இது குறித்து அண்ணாமலை எக்ஸ் சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில், லோக்சபா தேர்தல் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்ட போலீசாருக்கு வழங்கப்பட வேண்டிய பயணப்படி இன்னும் வழங்கப்படாமல் இருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. கடந்த மார்ச் 16, 2024 முதல் ஜூன் 6, 2024 வரையிலான 83 நாட்களுக்கான பயணப்படி வழங்க ஒப்புதல் அளித்து கடந்த ஏப்ரல் மாதமே அரசாணை பிறப்பித்த பிறகும், இன்னும் போலீசாருக்கான பயணப்படி வழங்கப்படவில்லை. ஏற்கனவே, அவர்களின் கைகளைக் கட்டிப் போட்டு, சட்டம் ஒழுங்கைச் சீர்குலைத்து வைத்திருக்கிறது திமுக அரசு. தேவையில்லாத வீண் விளம்பரங்களுக்கு, பல கோடி ரூபாய் மக்களின் வரிப்பணத்தை செலவு செய்வதில் முனைப்பாக இருக்கும் திமுக அரசு, போலீசாருக்கு வழங்க வேண்டிய பயணப்படியை வழங்கத் தாமதிப்பது, அவர்களிடையே பணியாற்றும் ஆர்வத்தைக் குறைத்து விடும். உடனடியாக, தேர்தல் பணிகளில் ஈடுபட்ட போலீசார்களுக்கு, 83 நாட்களுக்கான பயணப்படியை வழங்க வேண்டும். இவ்வாறு அண்ணாமலை கூறியுள்ளார்.

# அம்மா உணவகங்களை மூடவே கூடாது.. திமுக அரசு மறைமுக அழுத்தம் தருது எகிறி அடித்த டிடிவிதினகரன்

அம்மா உணவகங்கள் 2013ஆம் ஆண்டு அப்போதைய முதல்வர் ஜெயலலிதாவால் சென்னை தொடங்கி வைக்கப்பட்டது. ஏழை மற்றும் எளிய மக்கள் பயன்பெறும் வகையில் ஒரு ரூபாய்க்கு இட்லியும், 3 ரூபாய்க்கு தயிர் சாதமும், 5 ரூபாய்க்கு பொங்கல், சாம்பார் சாதம், எலுமிச்சை சாதமும் மூன்று வேளையும் வழங்கப்பட்டது. இதற்கு வரவேற்பு அதிகரித்த நிலையில், அம்மா உணவகங்கள் தமிழ்நாடு முழுவதும் திறக்கப்பட்டன.

2021ஆம் ஆண்டு திமுக ஆட்சிக்கு வந்த நிலையில், அம்மா உணவகங்கள் சரிவர செயல்படவில்லை என்றும், அதனை மூடுவதற்கு திட்டமிடுவதாகவும் அதிமுக, அமமுக உள்ளிட்ட கட்சிகள் குற்றம்சாட்டின. ஆனால்,அம்மாஉணவகங்களைமூடும்எண்ணமில்லை என்று தமிழக அரசு விளக்கம் அளித்துள்ளது.

இந்த சூழலில் அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் வெளியிட்ட அறிக்கையில், ‘‘அரசு மருத்துவமனைகளில் செயல்பட்டு வரும் அம்மா உணவங்களை மூட நிர்பந்திக்கும் மருத்துவமனை நிர்வாகங்களின் நடவடிக்கை கண்டனத்திற்குரியது. ஏழை, எளிய மக்களின் பசியைப் போக்கும் அம்மா உணவகங்கள் தொடர்ந்து செயல்படுவதை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும்’’ என்று வலியுறுத்தி உள்ளார்.

சென்னை ராஜீவ் காந்தி, எழும்பூர், ஸ்டான்லி, கீழ்பாக்கம் உள்ளிட்ட 7 அரசு மருத்துவமனைகளில் இயங்கிவரும் அம்மா உணவகங்களுக்கான குடிநீர் இணைப்பை துண்டித்துள்ளதாகவும், அதனை நிரந்தரமாக மூட மருத்துவமனை நிர்வாகங்கள் மறைமுக அழுத்தங்கள் கொடுப்பதாகவும் வெளியான செய்திகள் மிகுந்த அதிர்ச்சியளிப்பதாக குற்றம்சாடினார்.




அரசு மருத்துவமனைகளை நாடி வரும் ஏழை நோயாளிகள், குடும்பத்தினர் உறவினர்கள் மற்றும் அங்கு பணியாற்றும் தொழிலாளர்களின் நலனை கருத்தில் கொள்ளாமல் அம்மா உணவகங்களை மூட நிர்பந்திக்கும் மருத்துவமனை நிர்வாகங்களின் மனிதநேயமற்றநடவடிக்கைகடும்கண்டனத்திற்குரியது என்றும் விமர்சித்துள்ளார்.

ஏழை, எளிய மக்கள், உழைக்கும் தொழிலாளர்கள், ஆதரவற்ற முதியோர்கள் என பல்வேறு தரப்பினரின் பசியைப் போக்க தொலைநோக்கு சிந்தனையுடன் அம்மா உணவகங்களை ஜெயலலிதா தொடங்கி வைத்ததாகவும், அதனை மூட திமுக அரசு அளிக்கும் மறைமுக அழுத்தங்கள் அப்பட்டமான அரசியல் காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்துகின்றன என்றும் தினகரன் விமர்சித்தார்.

மேலும், ‘‘அண்டை மாநிலங்களுக்கும் முன்னோடித் திட்டமாக திகழும் அம்மா உணவகங்களை மூடும் நடவடிக்கையை உடனடியாக கைவிட வேண்டும். போதுமான நிதியை ஒதுக்கி ஏழை, எளிய மக்கள் தொடர்ந்து பயன்பெறும் வகையில் அவற்றின் உட்கட்டமைப்பு மற்றும் தரத்தை மேம்படுத்தி அனைத்து அம்மா உணவகங்களும் தொடர்ந்து இயங்குவதை உறுதி செய்ய வேண்டும்’’ என்று தமிழக அரசுக்கு தினகரன் வலியுறுத்தி உள்ளார்.

# ஆளுநர் விருதுகள் 2024: யாரெல்லாம் விண்ணப்பிக்கலாம்? விண்ணப்பிக்க கடைசி தேதி என்ன? முழு விவரம் இதோ!

தமிழகத்தில் சமூக சேவை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறந்து விளங்குபவருக்கு ஆண்டு தோறும் ஆளுநர் விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் நடப்பாண்டு ஆளுநர் விருதுகளுக்கு விண்ணப்பிக்கலாம் என ஆளுநர் மாளிகை தெரி வித்துள்ளது.

யாரெல்லாம் விண்ணப்பிக்கலாம்?

இது குறித்து ஆளுநர் மாளிகை நேற்று ஜூன் 28ஆம் தேதி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறி இருப்பதாவது, "சமூக வாழ்க்கை மேம்படுத்துவதற்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை ஊக்குவிப்பதற்கும் முன்மாதிரியான பங்களிப்பை அளித்த தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் தன்னலமற்ற சேவைகளை அங்கீகாரம் செய்யும் வகையில் ஆண்டு தோறும் ஆளுநர் விருது வழங்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் 2024ம் ஆண்டிற்கான விருதுகளுக்கு தனி நபர்கள் மற்றும் நிறுவனங்கள் தங்களது விண்ணப்பங்களை சுயமாக விண்ணப்பிக்கலாம்.

பரிசுத்தொகை:

மேலும் ஓய்வு பெற்ற மத்திய மற்றும் மாநில அரசு உயர் அலுவலர்கள் அரசு செயலாளர்கள் அரசு இணை செயலாளர் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் பத்ம





விருது பெற்றவர்களும் இந்த விருதிற்கு பரிந்துரைக்கலாம். விண்ணப்பதாரர்கள் அந்தந்த துறையில் குறைந்தபட்சம் 10 ஆண்டு காலத்திற்கு சேவை புரிந்திருக்க வேண்டும். இதில் தேர்ந்தெடுக்கப்படும் தனிநபருக்கு 2 லட்சமும் ஆளுநர் விருதும், தேர்ந்தெடுக்கப்படும் தனி நிறுவனத்திற்கு ரூபாய் 5 லட்சமும் விருதும் குடியரசு தினத்தன்று ஆளுநரால் வழங்கப்படும்.

விண்ணப்பிக்க கடைசி தேதி என்ன?

இந்த விருதுக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் https://tnrajbhavan.gov.in/ என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்ய awardsrajbhavantamilnadu@gmail.com என்ற அதிகாரப்பூர்வ இமெயில் முகவரிக்கு ஆகஸ்ட் 9ஆம் தேதி மாலை 5 மணிக்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பிக்கும் முகவரி:

மேலும் அந்த விண்ணப்பத்துடன் கேட்கப்பட்டுள்ள துணை ஆவணங்களை இணைத்து ஆளுநரின் துணைச் செயலாளர் மற்றும் கணக்காயர், ஆளுநர் செயலகம், ஆளுநர் மாளிகை கிண்டி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு குட் நியூஸ்... ரெடியான டெக்னாலஜி... கல்வித்துறை மெகா அப்டேட்

தமிழகத்தில் பள்ளிக் கல்வித்துறையின் கீழ் பல்வேறு நலத்திட்டங்கள் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாக மாணவர்கள் திறன்களை ஊக்கப்படுத்தும் வகையில் கலை திறன் போட்டிகள், வானவில் மன்றம், மாணவர் மன்ற செயல்பாடுகள், கல்வி சுற்றுலா, மாபெரும் வாசிப்பு இயக்கம் உள்ளிட்டவை பெரிதும் கவனம் பெற்றுள்ளன. இதேபோல் ஆசிரியர்களுக்கும் பல்வேறு விதமான பயிற்சிகள், உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள், அதிவேக இணைய வசதி, கணினி வசதி ஆகியவை செய்து தரப்பட்டுள்ளன.

மானியக் கோரிக்கை விவாதம்

இந்த வரிசையில் இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு கைக்கணினி (டேப்லெட் Tablet) வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக தமிழக சட்டப்பேரவையில் நடைபெற்று வரும் மானியக் கோரிக்கை விவாதத்தில் பள்ளிக் கல்வித்துறை சார்பில் வெளியிடப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பில், விரிவான விவரங்கள் இடம்பெற்றுள்ளன.

ஆசிரியர்களுக்கு கைக்கணினி திட்டம்

அதாவது, பள்ளிக் கல்வித்துறையின் கீழ் இயங்கி வரும் அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் நலனிற்காக அ யராது ஆசிரியர்கள் உழைத்து வருகின்றனர். மாறி வரும் கற்றல் கற்பித்தல் முறைகளுக்கு ஏற்ப ஆசிரியர்கள் த ங்கள் தனித் திறன்களை மேம்படுத்திக் கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்காக இடைநிலை மற்றும் ப ட்டதாரி ஆசிரியர்களுக்கு கைக்கணினி வழங்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

பாடநூல் கழகம் மூலம் ஏற்பாடு

மு தல்கட்டமாக 79,723 கைக்கணினிகள் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மூலம்



கொள்முதல்செய்யப்பட்டுள்ளன.இவைஆசிரியர்களுக்கு வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 202425ஆம் க ல்வியாண்டில் இரண்டாம் கட்டமாக மேலும் 55,478 கைக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு ஆசிரியர்கள் ப யன்பாட்டிற்காக வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பள்ளி வாரியாக பட்டியல்

இ ந்நிலையில் தான் யார் யாருக்கு கைக்கணினி கி டைக்கும் என்ற பட்டியல் சமீபத்தில் வெளியானது. அ தில் 31,139 தொடக்கப் பள்ளிகளின் பெயர்கள் இ டம்பெற்றுள்ளன. ஒவ்வொரு பள்ளிக்கும் எத்தனை கை க்கணினிகள் என்ற விவரமும் நேராக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் கணக்கெடுப்பு

இந்த பட்டியல் அகர வரிசைப் படி இருப்பதால் அரியலூர் மாவட்டம் முதல் விருதுநகர் மாவட்டம் வரை பட்டியலில் இ டம்பெற்றிருக்கின்றன. இதன் இறுதியில் மொத்த கை க்கணினிகளின் எண்ணிக்கை 79,723 எனக் கு றிப்பிடப்பட்டுள்ளது. கடந்த கல்வியாண்டில் ஆ சிரியர்களின் எண்ணிக்கை கணக்கெடுக்கப்பட்டிருந்தது.

அ தன் அடிப்படையில் தற்போது கைக்கணினி வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் டிரெக்கிங் செல்ல வனத்துறை எடுத்த அதிரடி முடிவு

தமிழகத்தில் ஏராளமான சுற்றுலா தளங்கள் இருந்து வருகின்றன.

அ திலும் முக்கியமாக மலை ஏற்றத்திற்காகவே பல்வேறு தலங்கள் தமிழகத்தில் இருந்து வருகின்றன. ச மீப காலமாக டிரெக்கிங் எனப்படும் மலையேற்றம் இ ளைஞர்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் அதிக அளவில் பேசப்பட்டு வருகிறது.

ம லையேற்றம் செய்வதினால் பல்வேறு நன்மைகள் ஏற்படுவதால் மக்கள் அனைவரும் மலை தலங்களை நோக்கி படையெடுத்த வண்ணம் உள்ளனர்.

இவ்வாறு இருக்கும் நிலையில் பல்வேறு இடங்களில் எங்கு மழை ஏற்றம் இருக்கிறது எங்கு மழை ஏற்றம் ந டத்த அனுமதி கொடுக்கப்படுகிறது என்பது தொடர்பாக யாருக்கும் தெரிவதில்லை.

இது தொடர்பாக தெளிவான முடிவு கிடைக்காததால் த மிழக வனத்துறை சார்பில் தற்போது புதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. அதாவது மலையேற்றத்தை ஊக்குவிக்கும் வகையில் ஆன்லைன் மூலம் சுமார் 40 வழித்தடங்கள் அதாவது 4 0 மலையேற்ற பாதைகள் தமிழக அரசு சார்பில் தெரிவிக்கப்படும்.

அ றிவிக்கப்படும் இந்த மலையேற்ற பகுதிகளில் வி திமுறைகளின் படி ஆன்லைனில் புக் செய்து ம லையேற்றம் செய்யலாம். அதாவது அந்த இ ணையதளத்தில் அந்த 40 வழிகளும் எந்தெந்த வ ழிகளில் செல்லலாம் அது தொடர்பாக முழு வி வரங்களையும் தெரிவிக்கப்பட்டு இருக்கும் என கூறப்படுகிறது.

இந்த இணையதளத்தில் அந்த தலத்திற்கு எவ்வாறு செ ல்லலாம்? அங்கு கடைபிடிக்க வேண்டிய ந டைமுறைகள் என்ன? அதில் இருக்கும் தடைகள் என்ன?மலையற்றம்சுலபமானதா அல்லதுகடினமானதா என்பது தொடர்பாக தெளிவாக கூறப்பட்டிருக்கும்.

இ து மட்டுமல்லாமல் அங்கே தங்கும் பட்சத்தில் அதற்கான தனி ஏற்பாடு செய்யும் பட்சத்தில் அதற்கான தேர்வையும் நாம் தேர்வு செய்து செல்லும் வகையில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.இது தமிழகமக்களிடையே மி கப்பெரும் வரவேற்பை பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



ம லையேற்றம் செய்வதினால் பல்வேறு நன்மைகள் கி டைக்கும் என்பதால் பொதுமக்கள் அனைவரும் த ற்போது பல்வேறு இடங்களை நோக்கி சென்ற வண்ணம் உள்ளனர். இவ்வாறு இருக்கும் நிலையில் இ துபோன்ற இணையதளம் மிகவும் உதவியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

## மத்திய அரசின் 3 புதிய குற்றவியல் சட்டங்கள் அமல்

ஆ ங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இயற்றப்பட்ட க ாலனியாதிக்க காலத்துச் சட்டங்களான இந்திய தண்டனைச் சட்டம் (ஐபிசி), குற்றவியல் நடைமுறைச் சட்டம் (சிஆர்.பிசி), இந்திய சாட்சியங்கள் சட்டம் (ஐஇசி) ஆ கிய சட்டங்களுக்குப் பதிலாக பாரதிய நியாய ச ன்ஹிதா (பிஎன்எஸ்), பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா (பிஎன்எஸ்எஸ்), பாரதிய சாட்சிய அதினியம் ஆ கிய 3 புதிய குற்றவியல் சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

க டந்த ஆண்டு நாடாளுமன்ற குளிர் கால கூ ட்டத்தொடரின்போது எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் இந்த புதிய சட்டங்களுக்கான ம சோதாக்கள் நிறைவேற்றப்பட்டன. பின்னர் இந்த ச ட்டங்களுக்கு, ஜனாதிபதி ஒப்புதல் அளித்த பிறகு அரசிதழில் கடந்த டிசம்பரில் வெளியானது.

இந்த நிலையில், 3 புதிய குற்றவியல் சட்டங்களும் இன்று (திங்கள்கிழமை) முதல் அமலுக்கு வருகின்றன. இதையொட்டி புதிய சட்டங்கள் குறித்து நாடு முழுவதும் சுமார் 5.65 லட்சம் போலீசார், சிறை, தடயவியல், நீதித் து றை அதிகாரிகள் மற்றும் சுமார் 40 லட்சம் தன்னார்வலார்களுக்கு பயிற்சியளித்து தயார்படுத்தும் ந டவடிக்கைகளில் மத்திய உள்துறை அமைச்சகம் மும்முரமாக ஈடுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தேசிய தூய்மை பணியாளர் நல ஆணையர் தர்மபுரி வருகை

தேசிய தூய்மை பணியாளர் நல ஆணைய தலைவர் வெங்கடேசன் தருமபுரி மாவட்டத்தில், தருமபுரி நகராட்சி குமாரசாமிபேட்டையில்உள்ளதூய்மைப்பணியாளர்களின் குடியிருப்புகளுக்கு சென்று தூய்மை பணியாளர்களிடம் குறைகள், கோரிக்கைகள் ஆகியவற்றை ஆகியவற்றை கேட்டறிந்தார். அப்போது தூய்மைப் பணியாளர்களின் வீ டுகளுக்கு வழங்கப்பட்டுள்ள குடிநீர், மின்சாரம், கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இ தைத்தொடர்ந்து தேசிய தூய்மை பணியாளர் நல ஆணைய ஆய்வு கூட்டம் தர்மபுரி கலெக்டர் அலுவலக கூடுதல் கூட்டரங்கில் ஆணைய தலைவர் வெங்க டேசன் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் சாந்தி முன்னிலை வகித்தார்.

இ க் கூட்டத்தில் கலந்து கொண்ட தூய்மை ப ணியாளர்கள் பேசுகையில், சில ஊராட்சிகளில் தூ ய்மை பணியாளர்களுக்கு மாதந்தோறும் முழு ஊ திய தொகையை வழங்காமல் பகுதி பகுதியாக வழங்கும் நிலை உள்ளது.

இ தேபோல் சில கிராம ஊராட்சிகளில் நிர்வாகிகள் தூய்மை பணியாளர்களை தரக்குறைவாக நடத்தி வரும் நி லை காணப்படுகிறது. பதினைந்து ஆண்டுகள் பணிபுரிந்த தற்காலிக தூய்மை பணியாளர்களை திடீரென ப ணிக்குவர வேண்டாம் என சில இடங்களில் கூறுகிறார்கள்.

இந்த பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகாண வேண்டும். நகராட்சி பகுதியில் தூய்மை பணியாளர்களின் ஊதியத் தொகையில் மாதந்தோறும் பிடித்தம் செய்யப்படும் இ பி.எப். தொகை குறித்த விவரங்கள் முறையாக தெரிவிக் க ப்படுவதில்லை. அந்த விவரங்களை தெரிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தூய்மை பணியாளர்கள் பணிபுரியும் இடங்களில் கண்ணியமாக நடத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்று தெரிவித்தனர்.

இதையடுத்து பேசிய ஆணையத் தலைவர்,

த ர்மபுரி மாவட்டத்தில் உள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளின் தூய்மை பணியாளர்களுக்கான ஊ தியம் தங்கு தடையின்றி வழங்கப்பட்டு வருவதை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். ஊதியம் நேரடியாக அ வர்களுடைய வங்கிக்கணக்கில் வ ரவுவைக்கப்படுகிறதா? என்பதை உறுதி செய்ய வேண்டும். ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு அரசு ஊதியம்

மு முறையாக சென்றடையப்படுகிறதா? என்பதை அ லுவலர்கள் உறுதி செய்ய வேண்டும். தூய்மை ப ணியாளர்களுக்கு ஆறு மாதங்களுக்கு ஒருமுறை க ட்டாயமாக மருத்துவ முகாம் நடத்தி மருத்துவ பரிசோதனைகள் செய்யவேண்டும்.

பிரதமரின் பல்வேறு காப்பீட்டுத் திட்டங்களில் தூய்மைப் ப ணியாளர்களை இணைக்க வேண்டும். தூய்மை பணியாளர்கள் மீது துறை அலுவலர்கள் தனிக் கவனம் செலுத்தி அவர்களுடையகோரிக்கைகளைஉடனுக்குடன் நிறைவேற்றி அவர்களின் வாழ்வாதாரம் மேம்படுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் கூறினார்.

இ தைத் தொடர்ந்து ஒரு பணியாளருக்கு தற்காலிக இளநிலை உதவியாளர் பணிக்கான ஆணை, ஓய்வு பெற்ற இரண்டு தூய்மை பணியாளர்களுக்கு ளர்க ரூ.12 லட்சத்து 96ஆயிரத்துக்கானகாசோலைஆகியவற்றைவழங்கினார். இ தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டீபன் ே ஜசுபாதம் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து,தூய்மைபணியாளர்கள்மாவட்டகூட்டத்தில் தம்முடைய குறைகளை எடுத்து கூறும்பொழுது தர்மபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தடங்கம் கிராம ஊராட்சியின் தலைவர் கவிதா என்பவரின் க ணவர் முருகன் என்பவர் தூய்மை பணியாளர்களை அடித்து துன்புறுத்துவதாக புகார் அளித்ததை தொடர்ந்து அவர் மீது தீண்டாமை வன்கொடுமை சட்டம் உட்பட ஐந்து பி ரிவின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# தர்மபுரி கல்வி மாவட்டம்: ஒழுக்கக்கேடான உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள்

தர்மபுரி மாவட்டம், நல்லம்பள்ளி கல்வி வட்டத்தில் பூவல்மடுவு என்ற இடத்தில் அரசு உயர்நிலைப்பள்ளி அமைந்துள்ளது. இது இருபால் மாணவர்கள் படிக்கும் பள்ளியாகும். இப்பள்ளியில் 200க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

இப்பள்ளியில் கடந்த ஒரு வருடத்திற்கும் முன்பாக பெண்பாலாசிரியர்கள் இல்லாத கல்வி கூடமாக இருந்தது. அந்த சமயத்தில் பருவ மாற்ற வயதில் அப்பள்ளியில் படிக்கும் மாணவியர்கள் தன்னுடைய இயற்கை உபாதைகளை கழிப்பதற்கோ அல்லது பருவ மாற்றங்கள் பற்றிய பரிமாற்றத்திற்கோ ஆண்பால் ஆசிரியர்களை அணுக முடியாமல் தவித்து வந்த நிலை இருந்தது. அந்த சமயத்தில் நாம் மாவட்ட கல்வி அலுவலராக இருந்த குணசேகரன் அவர்களை சந்தித்து கேட்டுக்கொண்டதுபேரில்இருபெண்பால்ஆசிரியர்களை அந்த அரசு பள்ளிக்கு தற்காலிகமாக பணி மாற்றம் செய்தார்.

பிறகு சில மாதங்கள் கழித்து அதே நிலை தொடர்ந்தது. பிறகு, மாவட்ட கல்வி அலுவலர் பணி இடமாற்றம் செய்யப்பட்டு ஒரு பெண் மாவட்ட கல்வி அலுவலராக பதவி ஏற்றார். பின்னர் அவரிடமும் சென்று அவருடைய அலுவலகத்தில் நிலைமையை சொல்லி கேட்டுக்கொண்டதன் பேரில் தற்பொழுது ஒரே ஒரு பெண்பாலாசிரியரை அந்தப் பள்ளிக்கு தற்காலிகமாக நியமித்துள்ளனர்.

ஆனால், இந்த நிலையும் நாளை மாறலாம். அதனால் அந்தப் பகுதி பெற்றோர்கள் மற்றும் மாணவியர்களின் எதிர்பார்ப்பு என்னவெனில் சம்பந்தப்பட்ட பள்ளிக்கு நிரந்தரமாகவே இரண்டு பெண் பால் ஆசிரியர்கள் நியமனம் வேண்டும் என்பதுதான்.

இதை மாவட்ட நிர்வாகம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பது வேண்டுகோளாக வைப்பதுடன் இந்தப் பள்ளியில் முரளி என்னும் ஆசிரியர் நியமனம் செய்யப்பட்டு தொடர்ந்து இந்த பள்ளியிலேயே பணிபுரிகிறார். ஆனால் இவர் பள்ளிக்கு வருவதை விட மாவட்ட கல்வி அலுவலகத்திற்கு சென்று அங்கே உள்ள அலுவல்களை பார்ப்பதுதான் அவரின் முக்கிய பணியாக இருக்கிறது. இதனால் அவர் பணி புரியும் இடத்தில் மாதத்திற்கு நான்கு நாட்கள் கூட ஒழுங்காக வேலை செய்வதில்லை. சதா எந்நேரமும் மாவட்ட கல்வி அலுவலகத்தில் தான் இருக்கிறார்.

இந்த நிலையில் மாணவ மாணவியருக்கு நடத்த வேண்டிய பாடங்களை எடுப்பதற்கு யாரும் இல்லாத நிலை தொடர்கிறது. இந்த நிலையையும் மாவட்ட கல்வி நிர்வாகம் உடனடியாக மாற்ற வேண்டும்.

அதே போன்று மேற்கண்ட பள்ளியில் பணிபுரியும் பார்த்தீபன் என்ற ஆசிரியர் அந்தப் பகுதியில் உள்ள ஒரு பெண்ணிடம் முறைகேடான தொடர்பில் உள்ளதாக அந்தப் பகுதி மக்கள் வெளிப்படையாகவே பேசிக் கொள்கிறார்கள். இவரும் பணிபுரியும் நேரத்தில் நேரடியாக அந்தப் பெண்ணின் வீட்டிற்கு போவதும் வருவதுமாக உள்ளார்.

இதனால் அந்த குடும்பம் சீரழிந்து விடும் நிலைமையில் உள்ளது. மாணவ மாணவியருக்கு ஒழுக்கத்தையும் கல்வியையும் போதிக்கும் பள்ளி ஆசிரியரே எப்படி என்றால் மற்ற விஷயங்களை நாம் வெளிப்படையாக சொல்லித் தெரிய வேண்டியது இல்லை. இந்த ஒழுக்கக்கேடான நடத்தையுள்ள ஆசிரியரையும் மாவட்டத்தை விட்டு வேறு மாவட்டத்திற்கு பணியிட மாற்றம் செய்ய வேண்டும் என்பது இப்பகுதி மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. இது போன்ற தவறுகள் இந்தப் பள்ளியில் மட்டுமல்ல மாவட்டத்தில் உள்ள சில பள்ளிகளில் நடந்து கொண்டிருக்கிறதை மாவட்ட கல்வி அலுவலர் விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரசியல் சூரியன் சார்பிலும், பொதுமக்கள் சார்பிலும் தர்மபுரி மாவட்ட கல்வி நிர்வாகத்திற்கு வேண்டுகோள் வைக்கிறோம்.

# கள் இறக்க அனுமதி கிடைக்குமா? தமிழக அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?


கள்ளக்குறிச்சி அருகே உள்ள கருணாபுரத்தில் திரும்பும் திசையெங்கும் மரண ஓலம் கேட்கிறது. பெற்றோர்களை இழந்த குழந்தைகள் செய்வதறியாது திகைக்கின்றன. கள்ளச்சாராயத்தின் காரணமாக சுமார் அறுபத்தி ஆறு பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் கவலைக்கிடமாக உள்ள நிலையில் உயிரிழப்புகள் அதிக்கும் வாய்ப்பு உள்ளது.

கள்ளச்சாராய விற்பனை கல்வராயன் மலையைச் சுற்றியுள்ள ஊர்களில் ஆண்டு கணக்கில் நடைபெற்று வருவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

ஒருபுறம் தமிழக அரசு டாஸ்மாக் நிறுவனம் மூலம் நடத்தும் மதுபானக் கடைகளை மூட வலியுறுத்தி போராட்டங்கள் ஆங்காங்கே நடைபெறுகிறது. அரசுக்கும் தொடர்ந்து கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

அதே சமயம் பனைமரம், தென்னை மரம் மூலம் கிடைக்கும் கள்ளுக்கு தமிழக அரசு தடை விதித்துள்ளது.





கள் இறக்க அனுமதியளிக்க வேண்டும் என்று பல்வேறு விவசாய அமைப்புகள் தமிழக அரசிடம் தொடர்ந்து கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால் திமுக அரசோ, அதிமுக அரசோ எந்த அரசு பொறுப்புக்கு வந்தாலும் கள் இறக்க அனுமதி கொடுப்பதில்லை.

கள்ளச்சாராயம் உடனே உயிரை போக்குகிறது என்றால் டாஸ்மாக் மது கொஞ்சம் கொஞ்சமாக உயிரை போக்குகிறது எனவே அவை அனைத்துக்கும் தடை விதிக்க வேண்டும். அதே சமயம் கள் இறக்க அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கைகள் எழுந்துள்ளன.

சட்டமன்றத்தில் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சித் தலைவர் ஈஸ்வரன் இதை வலியுறுத்தி பேசினார். கள்ளச்சாராய விவகாரம் தொடர்பாக பேசிய அவர், “கள் இறக்க அனுமதி அளித்தால், இதுபோன்ற விஷச் சாராய மரணங்கள் நடைபெறாமல் இருக்கும். காலை 6 மணி முதல் 12 மணி வரை கள் இறக்க அனுமதி வழங்க வேண்டும். கள் இறக்க அனுமதித்தால் விவசாயிகளுக்கும் வருமானம் கிடைக்கும்” என்று கூறியுள்ளார்.

# தமிழக முதல்வரின் தனிப்பிரிவு மனுவிற்கு நடவடிக்கை எடுக்காமல் அலட்சியப்படுத்தும் திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம்



திண்டுக்கல் மாவட்டம் திண்டுக்கல் கிழக்கு வட்டம் அ,வெள்ளோடு ஊராட்சியில் உயர் நீதிமன்ற உத்தரவுக்கு ம றாக நீரோடையில் ஆ க்கிரமித்து கட்டப்படும் க ழிப்பறை கட்டிடப் பணி யி னை தடுத்து நிறுத்திட வேண்டி மாண்புமிகு தமிழக மு தலமைச்சர் தனிப்பிரி வி ற்கு புகார் மனு அளிக்கப்பட்டு அதன் மீது நடவடிக்கைக்காக திண்டுக்கல் கிழக்கு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது, அதன்மீதுநடவடிக்கைமேற்கொண்டதிண்டுக்கல்கிழக்கு வ ட்டாட்சியர் திண்டுக்கல் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலருக்கு தற்போது பணி நடந்துவரும் இடம் கிராம கணக்கில் வாரி ஓடை என இருப்பதால் கட்டப்படும் க ழிவறை கட்டிடபணியினை நிறுத்திட வேண்டி கடிதம் அ னுப்பப்பட்டது, ஆனால் கடிதத்தைப் பெற்ற வட்டார வளர்ச்சி அலுவலர் அதன் மீது நடவடிக்கை எடுக்காமல் ப ணி தொடர்ச்சியாக நடைபெறுவது சம்பந்தமாக ம னுதாரர்கள் வட்டார வளர்ச்சி அலுவலரிடம் கேட்ட பொழுது ஊராட்சி ஒன்றியம் சார்பில் நடைபெறும் பணியை நி றுத்திட யாருக்கும் உரிமை இல்லை எனவும் கிராம கணக்கில் வாரி ஓடை என்று இருந்தால் அந்தப் பணியை தடுத்து நிறுத்திட வட்டாட்சியருக்கு உரிமை இல்லையா என தெரிவித்து அந்த இடத்தை அளவீடு செய்து தரக் கோரி வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்புமாறு துறை அலுவலரிடம் தெரிவித்தார், அளவீடு செய்து தரும் வரை இப்பணியினை நிறுத்துமாறு தெரிவித்ததற்கு ஓடை என தெரிய வந்தால் எவ்வளவு பெரிய கட்டிடம் ஆனாலும் இ டிக்கப்படும் இதற்கு நடவடிக்கை வேண்டியது வட்டாட்சியர் என தெரிவித்து விட்டார்,

இது சம்பந்தமாக திண்டுக்கல் கிழக்கு வட்டாட்சியரிடம் கேட்ட பொழுது ஓடையில் தனிநபர் ஆக்கிரமித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் அரசு துறையில் செய்யப்படும் பணியை நிறுத்த எனக்கு அதிகாரம் இல்லை எ னவும் மாவட்ட ஆட்சியரை அணுகும்படி தெரிவித்து விட்டார்,

ஏற்கனவேஇந்த நீரோடை தொடர்ச்சியை அகற்றிட வேண்டி பொதுமக்கள் சார்பாகவும் தனிநபர்கள் சார்பாகவும் அளிக்கப்பட்ட புகார் மனுவின் மீது வருவாய் கோட்டாட்சியர், திண்டுக்கல் கிழக்கு வட்டாட்சியர் செயல்முறை ஆணைகளின் வாயிலாக வட்டார வளர்ச்சி அலுவலருக்கு கடிதம் அனுப்பியும் அதன் மீது நடவடிக்கை எ டுக்காமல் அந்த நீரோடைபகுதிகளில் ஆக்கிரமித்து கட்டப்படும் கட்டிடப் பணியை தடுத்து நிறுத்தி வருவாய் கோட்டாட்சியர், வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலருக்கு வழங்கியுள்ள செயல்முறை ஆணைகளில் கு றிப்பிட்டுள்ளபடி நடவடிக்கை எடுத்திட வேண்டி பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை வைக்கின்றனர்,

# கிளாம்பாக்கம் பஸ் நிலையத்தில் சத்தமே இல்லாமல் நடந்த மாற்றம்

கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் தமிழ்நாட்டில் உள்ள மிகப்பெரிய பேருந்து நிலையம் ஆகும். ஆசியாவில் உள்ள மிகப்பெரிய பேருந்து நிலையமாக இது உள்ளது. இங்கே பேருந்து ஏற தினமும் ஒன்றரை லட்சம் பேர் வருகின்றனர்.

சென்னையின் மிகப்பெரிய அடையாளமாகவும் இந்த பேருந்து நிலையம் மாறி உள்ளது. இப்படிப்பட்ட நிலையில்தான் அங்கே போதிய ஏடிஎம்கள் இல்லை என்று விமர்சனம் வைக்கப்பட்டது.

முதலில் ஒரு ஏடிஎம் இருந்தது. அதன்பின் இரண்டு ஏடிஎம்தான் இருந்தது. இது மக்களுக்கு கடுமையான பிரச்சனைகளை கொடுத்தது.

இப்படிப்பட்ட நிலையில்தான் அங்கே மொத்தமாக 5 வங்கிகளின் 5 ஏடிஎம்கள் அமைக்கப்பட்டு உள்ளன. இந்த 5 ஏடிஎம்கள் காரணமாக மக்கள் இடையே மகிழ்ச்சி ஏற்பட்டு உள்ளது.

ரயில்நிலையம்: புதிய பேருந்து நிலையத்திற்கு எதிரே கிளம்பாக்கத்தில் வரவிருக்கும் ரயில்வே ஸ்டேஷன் மோசமான திட்டமிடலுடன் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த விவகாரத்தில் இந்திய ரயில்வே மீண்டும் குழப்பமடைந்துள்ளது.

கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் அருகே ரயில் நிலையத்தை அமைக்கும் பணிகள் தொடங்கி உள்ளன. இதற்காக தளம் அமைக்கும் பணிகள் நடந்து வருகின்றன. இதற்கான புகைப்படங்கள் தற்போது வெளியாகி உள்ளது.

ரயில் நிலையம் தமிழ்நாடு அரசின் செலவில் கட்டப்பட உள்ளது. தமிழ்நாடு அரசு கொடுக்கும் ரூ. 100 கோடி ரூபாயில் இந்த ரயில் நிலையம் அமைக்கப்பட உள்ளது. இந்த ரயில் நிலையத்தை பேருந்து நிலையத்துடன் இணைக்கும் ஆகாய நடைபாதை அமைக்க டெண்டர் கோரியது தமிழ்நாடு அரசு. நடைபாதை அமைக்கும் பணிகளை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மேற்கொள்ள உள்ளது.

ஆனால் குழப்பம்: புதிய பேருந்து நிலையத்திற்கு எதிரே கிளம்பாக்கத்தில் வரவிருக்கும் ரயில்வே ஸ்டேஷன் மோசமான திட்டமிடலுடன் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த விவகாரத்தில் இந்திய ரயில்வே மீண்டும் குழப்பமடைந்துள்ளது.

மூன்று நடைமேடைகளும் 300 மீட்டர் நீளம் மட்டுமே இருக்கும் என்பதால் கட்டப்படும் ரயில் நிலையத்தில் புறநகர் ரயில்கள் மட்டுமே நிற்க முடியும், அதே நேரத்தில் எக்ஸ்பிரஸ் ரயில்கள் மற்றும் வந்தே பாரத் போன்ற ரயில்கள் 380 மீட்டர் நீள நடைமேடை தேவைப்படுவதால் அங்கு நிற்க முடியாது.

இதனால் வெளிமாநில, வெளிமாவட்ட ரயில்கள் அங்கே நிற்காது. தாம்பரத்தில் இறங்கியே மாற வேண்டும். சென்னை கிளாம்பாக்கத்தில் கட்டப்படும் ரயில் நிலையம் இந்த வருட இறுதியில் பயன்பாட்டிற்கு வரும். அதற்கு இடையில் ரயில் நிலையம் பேருந்து நிலையம் இடையிலான பறக்கும் நடை பாலமும் கட்டி முடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

தனியார் இறங்கிவிட்டனர்: இப்படிப்பட்ட நிலையில்தான் தனியார் போக்குவரத்து நிறுவனங்கள் ரயில் நிலையத்தை இணைக்கும் வகையிலும், நகரச் சாலைகளில் ஆம்னி பேருந்துகள் நுழைவதற்கு கட்டுப்பாடுகள் வர உள்ளதை முன்னிட்டும் ஷட்டில் பேருந்துகளை இயக்க தனியார் பேருந்து நிறுவனங்கள் முடிவு செய்துள்ளன.

வடபழனி, வேளச்சேரி, பல்லாவரம் மற்றும் சோழிங்கநல்லூர் உட்பட நகரம் முழுவதும் உள்ள பல முக்கிய இடங்களிலிருந்து ஷட்டில் வேன் சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இந்த முன்முயற்சியானது நகருக்கு வெளியே 30 கிமீ தொலைவில் அமைந்துள்ள புதிய கிளம்பாக்கம் பேருந்து நிலையத்திற்கு பயணிகளை ஏற்றிச் செல்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது, இது பயணிகளுக்கான கடைசி மைல் இணைப்பை எளிதாக்கும் வகையில் கொண்டு வரப்பட்டு உள்ளது. கிளாம்பாக்கத்தில் வாகன நிறுத்துமிடம் தயாரானதும், அனைத்து ஆம்னி பேருந்துகளும் நகர சாலைகளுக்குள் நுழைய தடை விதிக்கப்படும்.

கிளாம்பாக்கத்தை நகரின் மையங்களுக்கு இணைக்க போதுமான விஜிசி பேருந்துகள் இருப்பதாக அரசாங்கம் கூறினாலும் அவை போதுமானதாக இல்லை என்பதால் தனியார் நிறுவனங்கள் வடபழனி, வேளச்சேரி, பல்லாவரம் மற்றும் சோழிங்கநல்லூர் உட்பட நகரம் முழுவதும் உள்ள பல முக்கிய இடங்களிலிருந்து ஷட்டில் வேன் சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

# பள்ளிக் கல்வித்துறையில் முக்கிய பொறுப்புகளில் அதிகாரிகள் மாற்றம்.. பறந்த உத்தரவு

கடந்த ஆண்டு ஜூன் மாதம் பள்ளி கல்வித்துறை இயக்குனராக அறிவொளி நியமனம் செய்யப்பட்டார். அவர் பதவியேற்று சரியாக ஓராண்டு நிறைவடைந்துள்ளது.

தற்போது அவரது பணி ஓய்வு பெற இருப்பதையடுத்து, பள்ளிக் கல்வித்துறையின் புதிய இயக்குனராக கண்ணப்பன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதற்கான உத்தரவை தமிழக அரசு பிறப்பித்துள்ளது. நிர்வாக காரணங்களுக்காக அரசின் பல்வேறு துறைகளில் உள்ள உயர் அதிகாரிகள் அவ்வப்போது இடமாற்றம் செய்யப்படுவது வழக்கம். அந்த வகையில், தற்போது பள்ளி கல்வித்துறையில் முக்கிய பொறுப்புகளில் அதிகாரிகள் மாற்றம் செய்யபட்டுள்ளனர். இது குறித்த விவரம் வருமாறு; தொடக்க கல்வி இயக்குனராக இருந்த கண்ணப்பன் பள்ளிக் கல்வி இயக்குனராக நியமனம் செய்யப்பட்டுள்ளர்.

பள்ளிக் கல்வித்துறை இயக்குனராக உள்ள அறிவொளி ஓய்வு பெற உள்ளதை அடுத்து கண்னன் நியமனம் செய்யப்பட்டுள்ளார். அதேபோல அரசு தேர்வுகள் இயக்குனர் சேதுராமவர்மா தொடக்க கல்வி இயக்குனராக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். மாநில கல்வியியல் ஆராய்ச்சி, பயிற்சி இயக்குனர் லலிதாவிற்கு அரசு தேர்வுகள் இயக்குனராக கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

பள்ளிக்கல்வித்துறையின் கரூர், மயிலாடுதுறை, கடலூர் ஆகிய மாவட்டங்களின் முதன்மை கல்வி அலுவலர்கள் வயது முதிர்வு காரணமாக நாளை பணி ஓய்வு பெறுகிறார்கள். இதன்காரணமாக, திருச்சி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கிருஷ்ணபிரியாவுக்கு, கரூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலராக கூடுதல் பொறுப்பும், நாகை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சுபாசினிக்கு, மயிலாடுதுறை மாவட்ட முதன்மை கல்வி அலுவலராக கூடுதல் பொறுப்பும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், விழுப்புரம் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அறிவழகனுக்கு, கடலூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலராகவும் கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

## முழுமையாக ரெடியான யானை கவுனி மேம்பாலம்.. எப்போது திறக்கப்படும்?

யானை கவுனி மேம்பாலத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த பணிகள் அனைத்தும் முற்றிலும் நிறைவடைந்து உள்ளது என்றும் விரைவில் யானை கவுனி மேம்பாலம் திறக்கப்படும் என்று சென்னை மாநகராட்சி ஆணையர் ராதாகிருஷ்ணன் தெரிவித் துள்ளார். இதனால்வாகனஓட்டிகள்மகிழ்ச்சிஅடைந்துள்ளனர். வால்டாக்ஸ் சாலையின் பக்கம் 165.24 மீட்டர், ராஜா முத்தையா சாலையின் பக்கம் 198.99 மீட்டர் நீளத்துக்கு சாய்தள சாலை மாநகராட்சி ரூ.30 கோடி செலவிலும், ரயில்வே துறை மூலம் ரூ.40 கோடியே 48 லட்சத்திலும் என மொத்தம் ரூ.71 கோடியே 26 லட்சத்தில் ரயில்வே மேம்பாலம் அமைக் கப்பட்டு வருகிறது.தமிழகஅரசிடம்தொடர்ந்துகோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால் திமுக அரசோ, அதிமுக அரசோ எந்த அரசு பொறுப்புக்கு வந்தாலும் கள்இறக்கஅனுமதிகொடுப்பதில்லை.கள்ளச்சாராயம் உடனே உயிரை போக்குகிறது என்றால் டாஸ்மாக் மது கொஞ்சம் கொஞ்சமாக உயிரை போக்குகிறது எனவே அவை அனைத்துக்கும் தடை விதிக்க வேண்டும். அதே சமயம் கள் இறக்க அனு மதிக்க வேண்டும் என்று கோரிக்கைகள் எழுந்துள்ளன. சட்டமன்றத்தில் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சித் தலைவர் ஈஸ்வரன் இதை வலியுறுத்தி பேசினார். கள்ளச்சாராய விவகாரம் தொடர்பாக பேசிய அவர், “கள் இறக்க அனுமதி அளித்தால், இதுபோன்ற விஷச் சாராய மரணங்கள் நடைபெறாமல் இருக்கும். காலை 6 மணி முதல் 12 மணி வரை கள் இறக்க அனுமதிவழங்கவேண்டும்.கள்இறக்கஅனுமதித்தால் விவசாயிகளுக்கும் வருமானம் கிடைக்கும்” என்று கூறியுள்ளார்.

# கோவை மாநகராட்சியுடன் இணையப் போகும் 20 ஊராட்சிகள்?

கோவை மாநகராட்சியில் தற்போது 100 வார்டுகள் உள்ள நிலையில், மாநகரை சுற்றியுள்ள பல்வேறு ஊராட்சிகள் கோவையுடன் இணைக்கப்பட வாய்ப்பு உள்ளது. அப்படி கோவை மாநகராட்சியுடன் இணைய வாய்ப்பு உள்ள 20 ஊராட்சிகள் எவை எவை என்பது பற்றி பார்ப்போம்.

கோயம்புத்தூர் என்ற கோவை மாநகரம் இன்றைக்கு தமிழ்நாட்டில் சென்னைக்கு அடுத்தபடியாக மிகப்பெரிய ஊராக உள்ளது. வெறும் ஊர் மட்டுமல்ல... சென்னைக்கு அடுத்தபடியாக மிகப்பெரிய தொழில் நகரமாக உள்ளது. தென்னிந்தியாவில் சென்னை, பெங்களூர், ஹைதராபாத்திற்கு அடுத்தபடியாக மிகப்பெரிய தொழில் வளர்ச்சி உள்ள நகரமாக கோவை உள்ளது. அதுமட்டுமல்ல கோவை மாநகரம் வெறும் 20 வருடங்களில் கற்பனைக்கும் எட்டாத அளவிற்கு வளர்ந்துள்ளது. கிராமங்களாக இருந்த கோவையின் புறநகர் பகுதிகள் பல இன்று கோவையின் முக்கியமான நகர்புறங்களாக உருவெடுத்து வருகிறது. தென்மாவட்டங்களை சேர்ந்த லட்சக்கணக்கான மக்களும், பல்லாயிரம் வட இந்தியர்களுக்கும் வாழ்வு தரும் நகரமாக கோவை இருக்கிறது.

கோவை மாநகரம் என்பது முன்பு திருச்சி சாலையில் ஒண்டிபுதூர் வரையிலும், அவினாசி சாலையில் சின்னியம்பாளையம் வரையிலும், பொள்ளாச்சி சாலையில் குனியமுத்தூர் வரையிலும், பாலக்காடு சாலையில் கோவை புதூர் வரையிலும் தான் இருந்தது. இதேபோல் மேட்டுப்பாளையம் சாலையில் துடியலூர் வரையிலும், அன்னூர் சாலையில் சரவணப்பட்டி வரையிலும் கோவை மாநகரம் இருந்தது. இது 2011ம் ஆண்டு நிலவரப்படி இருந்த நிலவரம் ஆகும். ஆனால் இன்று கோவை மாநகரம் சுற்றியுள்ள எல்லா பகுதிகளிலும் 15 முதல் 25 கிமீ தூரம் வரை வளர்ந்துள்ளது.

கோவை மாநகரத்தின் எல்லை என்பது கடைசியாக 2011ம் ஆண்டில் விரிவுப்படுத்தப்பட்டது. அப்போது, 3 நகராட்சிகள், 7 பேரூராட்சிகள் மற்றும் ஒரு கிராம ஊராட்சி ஆகியவை இணைக்கப்பட்டு, 152 சதுர கிமீ பரப்பிலிருந்த மாநகராட்சி, 254 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிற்கு விரிவுபடுத்தப்பட்டது. சரியாக சொல்வது என்றால், குறிச்சி,குனியமுத்துபர்,கவுண்டம்பாளையம்நகராட்சிகள், வடவள்ளி, வீரகேரளம், துடியலுபர், வெள்ளக்கிணறு, சரவணம்பட்டி, சின்ன வேடம்பட்டி, காளப்பட்டி பேரூராட்சிகள் மற்றும் விளாங்குறிச்சி ஊராட்சிப் பகுதிகள் கோவை மாநகரத்துடன் இணைக்கப்பட்டது.

தற்போது கோவை மாநகராட்சியில் 100 வார்டு பகுதிகள் உள்ளன. இந்த ஊர் நாளுக்கு நாள் விரிவாக்கம் அடைவதால் ஒவ்வொரு 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை புறநகர் பகுதிகளில் உள்ள உள்ளாட்சிகளை மாநகராட்சியுடன் இணைத்து வார்டுகளின் எண்ணிக்கை அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளது..

கோவை போலீஸ் நடத்திய வாகன சோதனை.. தவளை தன் வாயால் கெட்ட கதை.. இளைஞருக்கு சிக்கல்கோவை போலீஸ் நடத்திய வாகன சோதனை.. தவளை தன் வாயால் கெட்ட கதை.. இளைஞருக்கு சிக்கல்

அதன்படி தற்போது கோவை மாநகராட்சியுடன் இணைக்ககோவையைஒட்டியுள்ளஉள்ளாட்சிபகுதிகளை இணைக்க அரசு ஆய்வு செய்து வருகிறது. அந்த வகையில் கோவையின் புறநகர் பகுதிகளான வெள்ளமடை, அக்ரஹாரசாமக்குளம்,கொண்டையம்பாளையம்,சர்க்கார் சாமக்குளம், காளிபாளையம், வெள்ளானப்பட்டி, கீரணத்தம், குருடம்பாளையம், பன்னிமடை, நீலாம்பூர், இருகூர், மயிலம்பட்டி, பட்டணம், கலிக்கநாயக்கன்பாளையம், வேடபட்டி, சோமையம்பாளையம், தீத்திப்பாளையம், பேரூர் செட்டிபாளையம், மலுமிச்சம்பட்டி, சீரபாளையம் ஆகிய 20 உள்ளாட்சி பகுதிகளை இணைப்பது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது.

கோவை மாநகரம் விரிவுப்படுத்தப்பட்டால் மட்டுமே மக்கள் தொகை அடிப்படையில் கிடைக்க வேண்டிய மெட்ரோ ரயில், சர்வதேச விமான நிலையம், பாதாள சாக்கடை பணிகள், ஸ்மார்ட் சிட்டி திட்ட பணிகள் போன்றவை எல்லா பகுதிகளுக்கும் எளிதாக கிடைக்கும் என்பதால் இந்த இணைப்பு மிகவும் முக்கியமானதாக பார்க்கப்படுகிறது.

# சென்னை மாநகராட்சியில் உங்கள் வீடு இருக்கா அரசு கொண்டு வந்த சட்ட மசோதா தெரியுமா?

சென்னை குடிநீர் வாரியத்தின் கழிவுநீர்ப் பாதைக்கு 30 மீட்டர் சுற்றளவில் உள்ள தனியார் தெருக்கள், வளாகங்கள் கழிவுநீர் இணைப்பு பெறுவது கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது. இதற்காக வெள்ளிக்கிழமை அன்று திருத்திய சட்ட மசோதா சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதை மீறினால் என்னென்ன தண்டனைகள் தெரியுமா? இந்த பதிவில் பாருங்கள்.

சட்டப்பேரவையில் நகராட்சி துறை அமைச்சர் கே.என்.நேரு சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் சட்டத்தை திருத்தி தாக்கல் செய்த மசோதாவில் கூறியுள்ளதாவது:

"தனியார் வளாகம் அல்லது ஒரு தனியார் தெருவின்மிக அருகில் உள்ள இடத்திலிருந்து 30 மீட்டர் தூரத்துக்குள், வாரியத்தின் கழிவுநீர்ப் பாதை இருக்குமானால், அந்த வளாகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவர், தனியார் தெருவின்உரிமையாளர், கழிவுநீரைவாரியத்தின் கழிவுநீர்ப்பாதையில் வெளியேற்றுவதற்காக இணைப்பு வழங்க அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியிடம் விண்ணப்பிக்க வேண்டும். கூடுதல் தண்டத் தொகை: அந்த விண்ணப்பம் பெறப்பட்டதன் பேரில், அந்தவளாக உரிமையாளர், குடியிருப்பவர் அல்லது தெருவின் உரிமையாளர், கழிவுநீர்இணைப்புக்கு வாரியத்துக்கு ஏற்படும் செலவுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலும், அவர்கள் கழிவுநீர் அகற்றுதலுக்கான பிற வழிமுறை எவற்றையும் தொடரக் கூடாது. இதை மீறினால், 6 மாதங்கள் வரை நீட்டிக்கப்படும் ஒரு கால அளவுக்கான சிறைத் தண்டனை அல்லது ரூ.10 ஆயிரம் வரையிலான அபராதம் அல்லதுஇரண்டும்விதிக்கப்பட்டுதண்டிக்கப்பட வேண்டும். தொடர்ந்துமீறினால், ஒவ்வொரு நாளுக்கும் ரூ.500 வரை நீட்டிக்கப்படும் கூடுதல் தண்டத் தொகை விதிக்கப்பட வேண்டும்.

இந்த விவகாரத்தில் மேல்முறையீடு என்பது, உத்தரவு பெறப்பட்டு30நாட்களுக்குள்மேலாண்மைஇயக்குநருக்கு அனுப்பப்பட வேண்டும். மேல் முறையீட்டாளர் உரிய கால அளவுக்குள் மேல் முறையீடு செய்யப்படாததற்கு போதிய காரணம் உள்ளது என்று மேலாண்மை இயக்குநர் கருதினால், 30 நாட்களுக்குப்பின் செய்யப்பட்ட மேல்முறையீட்டையும்ஏற்கலாம்.இதற்கு60நாட்களுக்குள் தீர்வுஅளிக்கவேண்டும்"இவ்வாறுஅதில்கூறப்பட்டுள்ளது.

சென்னை குடிநீர் வாரியத்தில் கழிவுநீர் பாதைக்கு விண்ணப்பிப்பது எப்படி? சென்னையைச் சேர்ந்த பொதுமக்கள் தங்கள் வீட்டிற்கு குடிநீர், கழிவுநீர் இணைப்பைப்பெறுவதற்குசம்பந்தப்பட்டபகுதிபணிமனை அலுவலகங்களில் நேரிடையாகவும், தொலைபேசி எண்.(04445674567) மற்றும் இணையதளம் (https://cmwssb.tn.gov.in) மூலமாகவும் விண்ணப்பிக்கலாம். உரிய ஆய்வுகளை மேற்கொண்ட பின்னர் ஆவணங்கள் உரிமையாளரிடம் சரிபார்க்கப்பட்டு குடிநீர்/கழிவுநீர் இணைப்பு வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சென்னை குடிநீர் வாரியம் கூறியுள்ளது

தரை தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய (G+1) மாடி கட்டிடங்கள் (குடியிருப்புகள் மற்றும் பகுதி வணிக கட்டிடங்கள்) 1800 சதுர அடி வரை இணைப்புக் கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் (உள்கட்டமைப்பு மேம்பாட்டு கட்டணங்கள் உள்பட) அனைத்து கட்டணங்களும் ஒரே தவணையாகவோ அல்லது 10 தவணைகளில் (ஆறு மாதங்களுக்கு ஒருமுறை ஐந்து ஆண்டுகளில்) செலுத்தலாம். தரை தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் கூடிய (G+1) மாடி கட்டிடங்கள் (குடியிருப்புகள் மற்றும் பகுதி வணிக கட்டிடங்கள்) மற்றும் வாகன நிறுத்துமிடத்துடன் கூடிய 3 மாடி கட்டிடங்கள் (Stilt +3) 2700 சதுர அடி வரை குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு பெறுவதற்கு இணைப்புக் கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள்(உள்கட்டமைப்புமேம்பாட்டுக்கட்டணங்கள் உள்பட) அனைத்து கட்டணங்களையும் ஒரே தவணையாகவோ அல்லது மூன்று தவணைகளில் (ஆறு மாதங்களுக்கு ஒருமுறை, 18 மாதங்களில்) செலுத்தலாம்.

பிற வகையான கட்டிட உரிமையாளர்கள், குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு பெறவிருக்கும் கட்டிடத்தின் கட்டுமானப் பணி நிறைவு பெற்றதற்கான சான்றிதழை சமர்ப்பித்து கழிவுநீர் மற்றும் குடிநீர் இணைப்பிற்கான முழு கட்டணத் தொகையினை ஒரே தவணையாக செலுத்தி இணைப்பை பெற்றுக் கொள்ளலாம்.

# தர்மபுரி மாவட்டம்

# மக்களுடன் முதல்வர் திட்டம் தொடக்க விழா




தமிழக முதல்வர் அவர்கள் பதவி ஏற்று 2023–24ஆம் வருடத்தில்மூன்றாவதுமுறையாகதருமபுரிமாவட்டத்திற்கு வருகை தந்தார். மக்களின் முதல்வர் திட்டத்தை துவக்கி ை வத்ததோடு பல்வேறு நலத்திட்டங்களை பொதுமக்களுக்கு கொடுப்பதற்கான வருகை சிறப்பாக இருந்தது. ஏற்கனவே, மகளிர் உரிமை திட்டத்தை அவர் த ர்மபுரி மாவட்டத்தில் துவக்கி வைத்தது நினைவி லிருக்கலாம்.

தற்பொழுது மக்களின் முதல்வர் திட்டத்தை அவர் இதே த ர்மபுரியில் துவக்கி வைத்துள்ளது தர்மபுரி மாவட்டத்திற்கானமுக்கியத்துவம்முதல்வர்அவர்களுக்கு உள்ளதாக அறியப்படுகிறது.

ம க்களின் முதல்வர் திட்டத்தை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றிய முதலமைச்சர் தன்னுடைய உரையில், அ ரூர் அரசு மருத்துவமனை உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும் தருமபுரி வெண்ணாம்பட்டி சாலையில் புதிய ரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும் பஞ்சபள்ளி, ர ாஜபாளையம் அணைக்கட்டுகள் புனரமைக்கப்படும் என்ற அறிவிப்புகளை வெளியிட்டார்.

மேலும் அவர் பேசுகையில்,

அ னைத்து தொகுதிகளையும் என்னுடைய தொகுதிகளாக நினைத்து பணியாற்றுகிறேன், என்றும்

அ ரூர் பேரூராட்சி நகராட்சியாக தரம் உயர்த்தப்படும் என்றும், கூறிய அவர் ஆட்சிக்கு வந்த 100 நாட்களில் ே காரிக்கைகளை நிறைவேற்றுவோம் என உ றுதியளித்தோடு, சாத்தியமுள்ள அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்றியுள்ளோம் என தனது உரையில் குறிப்பிட்டார். செல்லும் இடமெல்லாம் ஒன்றிய அரசு விமர்சிக்கும் தமிழக முதல்வர் இங்கும், தமிழ்நாட்டில் ே தால்வியைத் தழுவினாலும் இன்னும் ஒன்றிய அரசு பாடம் கற்கவில்லை என்று குறிப்பிட்டார்.

இ வ்விழாவில் அமைச்சர்கள் நேரு, எம். ஆர். கே. ப ன்னீர்செல்வம் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களும், சி றப்பு அலுவலர் மோகன் ஐ.ஏ.எஸ்., மற்றும் தர்மபுரி மாவட்ட ஆட்சியர் சாந்தி ஐ.ஏ.எஸ்., உள்பட மாவட்டத்தை சேர்ந்தசட்டமன்றஉறுப்பினர்கள்,பாராளுமன்றஉறுப்பினர் ம ற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வசூல் வேட்டையில் ஈரோடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அலுவலகம்?

ஈரோடு மாவட்டம் வேளாண் குறைதீர் கூட்டம், கலெக்டர் ராஜகோபால் சுன்கரா தலைமையில் நடந்தது. டி .ஆர்.ஓ., சாந்தகுமார், பயிற்சி உதவி கலெக்டர் ராமகிருஷ்ணசாமி முன்னிலை வகித்தனர்.விவசாயிகள் தங்கள் கோரிக்கைகளை மனுவாக முன் வைத்துள்ளனர் இதில் கூறியுள்ளது

ஈரோடு மாநகர சுண்ணாம்பு ஓடை, பிபி அக்ரஹாராம் ப வானி ரோடு, சூலை, தண்ணி பந்தம் பாளையம் , ப குதியில் உச்சநீதி மன்ற உத்தரவுகளை மீறி சாயப்பட்டறைகள் மற்றும் பிரிண்டிங், பிளீச்சிங் , சலவை டையிங் தொழிற்சாலையில் இரவு பகலும்

சு த்திகரிப்பு செய்யப்படாத சாயக்கழிவு நீரை வெளியேற்றும் ஆலைகளின் மின் இணைப்பு து ண்டிக்கப்பட்டு, சீல் வைக்கப்படுகிறது. கடந்த ஓராண்டில், 140 சாய, சலவை ஆலைகளின் மின் இணைப்பு து ண்டிக்கப்பட்டுள்ளது.அப்போறு குறுக்கிட்ட கலெக்டர் ர ாஜகோபால் சுன்கரா, ''மாசுகட்டுப்பாட்டு வாரிய செயல்பாடுகள் திருப்திகரமாக இல்லை.

க ாளிங்கராயன் கால்வாய் தூர்வாரும்போது அதில் கழிவுநீர் அதிகம் இருந்ததாக படத்துடன் எனக்கு அனுப்பி உள்ளனர்,'' என்றார். விவசாயிகள் தெரிவிப்பது ஈரோடு ம ாவட்டத்தை பொருத்தவரை முழுவதும் சிறியதும் பெரியதுமாக 100 சாயப்பட்டறை ஆலைகள் (டையிங் யூனிட்)மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதி பெற்று இயங்கி வருகின்றன.

இவை தவிர, 90க்கும் மேற்பட்டசாயப்பட்டறைகள் சட்ட வி ரோதமாக செயல்படுகின்றன.இந்த பட்டறைகளில் து ணி நூல்களுக்கு சாயமேற்றப்பட்ட பிறகு, அவற்றில் இ ருந்துசுத்திகரிக்கப்படாமல் வெளியேற்றப்படும் கழிவு நீரால் காவேரி ஆறு உள்ளிட்ட நீர்நிலைகள்மாசடைவதாக புகார்கள் குவிந்த வண்ணம் உள்ளன.

அ தேநேரம், விதிகளை மீறி செயல்படும் ச ாயப்பட்டறைகளில் சோதனைக்குச் செல்லும் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள், பெயரளவுக்கு அ பராதம் விதித்துவிட்டு, லட்சக்கணக்கில் ல ஞ்சவேட்டையாடி வருவதாகவும் குற்றச்சாட்டுகள் கி ளம்புகின்றன.இந்த நிலையில், தமிழக சுற்றுச்சூழல் து றை அமைச்சர் மெய்யநாதன் வரை 'கவனித்துக் கொள்ள'வேண்டும்என்றுகூறிஅதிகாரிகள்சாயப்பட்டறை உரிமையாளரிடம் வசூலிக்கப்படுவதாக புகார் மீது புகார் எழுந்துள்ளது ?

ம ந்திரியின் பெயரைச் சொல்லி பகிரங்கமாக லஞ்ச வேட்டையாடும் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மட்டுமின்றி, த மிழகமே மாசடைந்து விடும் அபாயம் உள்ளது. இ தெல்லாம் அமைச்சருக்குத் தெரிந்து நடக்கிறதா அ ல்லது அவர் பெயர் தவறாக ப யன்படுத்தப்பட்டுள்ளதா? என்பது குறித்து விரிவான வி சாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்கிறார்கள் விவசாயிகள் மற்றும் பொதுமக்களும் சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்


## விளம்பர கட்டணம்

| விவரம் | பின்பக்க அட்டை வண்ணம் | உள் அட்டை வண்ணம் | இதழ் உள்ளே கருப்பு வெள்ளை |
|---|---|---|---|
| முழு பக்கம் | ரூ.20,000 | ரூ.15,000 | ரூ.5,000 |
| அரை பக்கம் | ரூ.10,000 | ரூ.7,500 | ரூ.2,500 |

# Indira Gandhi Put Us In Jail, But Never Abused Us, Says Lalu Yadav

*R*ashtriya Janata Dal (RJD) Chief and former Bihar Chief Minister Lalu Prasad Yadav on Saturday recalled what they went through during the dark days of Emergency and said that the then Prime Minister Indira Gandhi put many of the leaders behind bars, but she never abused them.

In a post shared on X, the RJD chief shared an article, "The Sangh Silence in 1975" written by him and journalist Nalin Verma. In the article, they attacked the BJP-led central government and said that although 1975 is a stain on the country's democracy, let's not forget who doesn't respect the Opposition in 2024.

"I was the convener of the steering committee that Jayaprakash Narayan--had constituted to carry forward the movement against the excesses of Emergency imposed by the then PM Indira Gandhi. I was in jail under the Maintenance of Security Act (MISA) for over 15 months. My colleagues and I did not know many of the BJP ministers speaking about the Emergency today. We hadn't heard of Modi, J P Nadda, and some of the PM's other ministerial colleagues who today lecture us on the value of freedom," he posted on X.

"Indira Gandhi put many of us behind bars, but she never abused us. Neither she nor her ministers called us "anti-national" or "unpatriotic". She never enabled vandals to defile the memory of Babasaheb Ambedkar--the architect of our Constitution. 1975 is a stain on our democracy but let's not forget who doesn't respect the Opposition in 2024," the RJD leader added.

On June 25, 1975, Indira Gandhi, the then



Prime Minister, imposed a 21-month state of emergency. This year marks the 50th anniversary of the Emergency, which is considered one of the most controversial periods in India's political history.

Earlier on Thursday, President Droupadi Murmu addressed the joint sitting of the Parliament and criticised the imposition of 'Emergency'.

"Emergency was the biggest and darkest chapter of the direct attack on the Constitution. The entire country plunged into chaos during the Emergency, but the nation was victorious against such unconstitutional powers", she said.

The remarks of the President have triggered reactions from the leaders of the INDIA bloc.

Congress National President Mallikarjun Kharge said that Prime Minister Narendra Modi is attempting to gain cheap applause by making the President deliver a speech filled with lies.

"Modi Ji is trying to gain cheap applause by making the Honorable President speak lies, which the people of India have already rejected in the 2024 elections," Kharge wrote on his official 'X' account.

Owned, Published & Printed by **K.MANIKANDAN** on Behalf of: M/s. Arasiyal Suriyan Monthly,
Printed At **SEAMAN GRAPHICS** No.7/253, KVN Puram, 2nd Street, Kilpauk Garden, Chennai-600 010.
and published from: 98/1, Vijayamangalam Road, Hospital Road, Uttukuli, Tiruppur-638751.
Editor: **K.MANIKANDAN**, Mobile:90253 05909. Mail ID:arasiyalsuriyan77@gmail.com

வாழ்க வளமுடன்






SPT ASSOCIATES

K.சரவணன்

94871 24791
98651 24792

ஓம் சரவணபவ



சஷ்டி எஸ்டேட்


ஆபிஸ்: 45-13, பள்ளிப்பாளையம் ரோடு,
சார்பதிவாளர் அலுவலகம் அருகில்,
B.குமாரபாளையம் - 638 183. நாமக்கல் மாவட்டம்.

# தமிழரின் லட்சியம்! வெல்வது நிச்சயம்!!

## தமிழரின் பண்பாடு பாரம்பரியம் காக்க இணைவீர்.

## தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டம் மாநில பொறுப்பாளர்கள் வரவேற்கப்படுகின்றனர்

தொடர்புக்கு
89255 70100




லட்சிய தமிழர் முன்னேற்ற சங்கம்
தமிழரின் அடையாளம்

Arasiyal Suriyan, Tamil, English Monthly Registed with the Registar of Newspapers for India. JULY 2024. RNI No: TNBIL/2022/83024.


# MG ASSOCIATES

BUILDER / FINANCE / LOANS

தமிழகம் முழுவதும்

## உடனடி கடன் வசதி

| | |
|---|---|
| HOME LOAN | வீடு கட்ட / மனை வாங்க |
| MORTGAGE LOAN | அடமானக் கடன் |
| BUSINESS LOAN | தொழில் கடன் |
| PROPERTY LOAN | சொத்துமேல் கடன் |
| COLLATERAL LOAN | பிணைய சொத்து கடன் |
| DOCTOR'S LOAN | மருத்துவ உபகரணங்கள் வாங்க |

BANK TAKE OVER + TOPUP குறைந்த வட்டியில்...

Cell : +91 94427 51661 – +91 86105 57805

E-mail : mgassociates04@gmail.com